உ

ஸ்ரீ குகமயம்

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி துணை

# சுவாமிமலை

# திருவலஞ்சுழி

# தல வரலாறு

பதிப்பாளர் :

எஸ். சோமசுந்தரம், பி. ஏ. பி. எல்.

நிர்வாக அதிகாரி

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி

தேவஸ்தான வெளியீடு

1967

பதிப்புரிமைபெற்றது ★ விலை ரூ. 1-00

உ

ஸ்ரீ குகமயம்

ஸ்ரீ சுவாமிநாத சுவாமி துணை

# சுவாமிமலை, திருவலஞ்சுழி
# தல வரலாறு


பதிப்பாளர்:

எஸ். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.,

நிர்வாக அதிகாரி.



ஸ்ரீ சுவாமிநாதசுவாமி தேவஸ்தான வெளியீடு.

1967


பதிப்புரிமை பெற்றது] [விலை ரூ. 1-00



ஸ்ரீ சுவாமிநாதசுவாமி

உ
திருச்சிற்றம்பலம்,
கண்கொடுத்த பிள்ளையார் துணை,

# முகவுரை

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!!

பழைமைக்கும் பெருமைக்கும் தங்குமிடமான இந்த அகண்ட பாரத தேசத்தில் கண்ணிற்கினிய கற்கோவில்களும், சிற்பங்களும், செவிக்கினிய கற்றோர் இன்னிசைத் தமிழ் பாக்களும், கருத்துக்கினிய கருத்துரைகளும், கொண்டு விளங்குவது தமிழகமாகும். இத்தமிழகத்தில் சோழ நன்னாடான தஞ்சை மாவட்டம் தென்னாட்டின் நெற்களஞ்சியமாகவும், திருக்கோவில்களின் உறைவிடமாகவும் உள்ளது. இத்தஞ்சை மாவட்டத்திலே எவ்வாற்றாலும் சிறந்து விளங்குவது "திருவேரகம்" என்ற சுவாமிமலையே. கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாய், பக்தர்களால் பாரிக்கப்படும் முருகன்தலமாகும் சுவாமிமலை. இத்தலம் ஆறுபடை வீடுகளில் நான்காவதாகும். நாள்தோறும் திருவிழா எனும்படியாக அடியவர்களின் கூட்டங்களாலும், அவ்வப்பொழுது எண்ணற்று நடக்கும் திருமணங்களாலும், இந்த ஊர் யாத்ரீகர்கள் காணும் ஓர் முக்கிய தலமாகிவிட்டது. இத்தலத்திற்கு வரும் அடியார்கள் இறைவனைத் தரிசித்துத் தலப்பெருமையை விளக்கும் தல வரலாற்று நூலை விரும்பி வாங்கிப்படித்து மகிழ்கிறார்கள். முன்பு வெளியிட்ட தேவஸ்தானத்துத் தலபுராணம் ஐந்து பதிப்புகள் செலவழிந்துவிட்டன. இதற்கிடையில் பக்தர்களும், பெரியோர்களும் நாள்தோறும் இத்தலநூலை விரும்பிக் கேட்டுக்கொண்டே இருந்தபடியால் இப்புதிய பதிப்பு வெளியிட ஏதுவாயிற்று. இப்புதிய பதிப்பில் பலபுதிய சேர்க்கைகளும் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய முறைப்படி ஆக்கப்பட்டுள்ளது. முதலில் இந்நூலை

வெளியிட அருளும் ஆக்கமும் தந்து என்றும்போல் நின்றுதவிய சற்குருநாதன் ஸ்ரீ சுவாமிநாதன் மற்றும் தலப்பிள்ளையார், அன்னை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் முதலியவர்களின் பொன்னார் திருவடிகளில் சிரம் குனித்து அஞ்சலி செய்கிறோம். இந்நூலை வெளியிட ஊக்கந்தந்து உதவிய அறநிலைய இலாகாவிற்கும், அறங்காவலர்கள் அனைவருக்கும் மனங்குளிர்ந்த நன்றி.

இத் தலபுராண வெளியீட்டிற்கு சென்னை அருள் மொழியரசும் முத்தமிழ் வேந்தருமான திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தனது பெருத்த அலுவல்களுக்கிடையே இந்நூலை செப்பனிட்டும் அணிந்துரை கொடுத்தும் உதவியதைப் பெரிதும் போற்றுகிறேன். வாரியார் சுவாமிகளுக்கு எனது உளங்கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு உடனிருந்தும் உள்ளளவும் கருத்துக்களைத் தந்தும் ஆவன எல்லாம் உதவிபுரிந்தும் வெளிவர உறுதுணையாய் இருந்த தஞ்சை பிரவசன பூஷணம், பண்டித சிரோமணி என். எஸ். தாதாச்சாரியாருக்கும், மற்றும் ஷை தேவஸ்தான ஓதுவார் திரு, ஏ. என். பஞ்சநத தேசிகருக்கும் நம்முடைய அன்புகலந்த நன்றி.

இறைவன் பணியெனக் கொண்டு நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ ஜனார்த்தன அச்சகத்தாருக்கும் எனது உளம் கனிந்த நன்றி.

சுவாமிமலை,
1–2–1967.

எஸ். சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,
நிர்வாக அதிகாரி.

உ

ஸ்ரீ சுவாமிநாதன் துணை

திருள்மொழி அரசு, திரு. முருக கிருபானந்த வாரியார் சுவாமி அவர்கள் திருவேரகம் என்னும் சுவாமிமலை தல வரலாற்றினை ஆய்ந்து உவந்து அளித்தது.

## அணிந்துரை

மூவர்க்கும் தேவர்க்கும் மற்றும் யாவர்க்கும் தலைவராம் முழுமுதற் கடவுளாம் முருகப்பெருமான் எழுந்தருளிய திருத் தலங்கள் பலப்பல.

*"பதிகள் பல ஆயிரங்கள் மலைகள் வெகு கோடிநின்ற*
*பதமடியர் காணவந்த* —கதிர் காமா.

என்கின்றார் அருணகிரிநாதர்.

இத்தகு வித்தகத் தலங்களுள் மிகுந்த பயன்தரு வியன் தலங்கள் ஆறுபடை வீடுகளாகும். இந்த ஆறுபடை வீடுகளுள் நான்காவது படைவீடு திருவேரகம் என்ற சுவாமிமலையாகும்.

சுவாமிமலைதான் திருவேரகம் என்று அருணகிரி சுவாமிகள் கூறியருளுகின்றார்.

*"ஏரக வெற்பெனும் அற்புதமிக்கசு*
*வாமிம லைப்பதி நிற்குமிலட்சன*
*ராஜத லட்சன லட்சுமி பெற்றருள் பெருமானே!"*

சுவாமி என்ற சொல்லுக்கு அகில உலகங்களையும், எல்லா ஆன்மாக்களையும் சொத்தாக உடையவன் என்பது பொருள். ஸ்வம் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல்.

அமரசிம்ஹம் என்ற வடமொழி நிகண்டு முருகன் பெயர்ச் சொல் தொகுதியில்,

*"தேவஸேனாபதிச்சூர ஸ்வாமி கஜமுகானுஜ"*

என்று கூறுகின்றது.

எனவே முருகனுடைய திருப்பேர் சுவாமி. சுவாமியின் மலை சுவாமிமலை. இங்கே எழுந்தருளிய பெருமான் சுவாமிநாதன். சுவாமியாகிய நாதன் என்று விரிந்து பொருள்படும். இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

இத்தலத்து முருகவேள் தந்தைக்கு உபதேசித்த ஞான தேசிகன். இவரை மெய்யன்புடன் வழிபட்டோர் உண்மை ஞானத்தைப் பெறுவர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் அளவற்ற மகிமையும் உள்ள அரிய பெரிய திருத்தலமாகும்.

குருமலை என்ற இத்திருத்தலத்தின் வரலாற்றுப் பெருமை ஆலய அமைப்புக்கள் முதலியவற்றைச் சுருக்கமாக எழுதி திருக்கோயில் தலவரலாறாக வெளியிடுகின்றார்கள். இது அன்பர்கட்கு மிகவும் பயனுடையதாகும். இதனை வெளியிட்ட கோயில் நிர்வாகிகளுக்கு நன்றி. இதனை ஏனோரும் படித்துப் பயன் பெறுவார்களாக.

சென்னை,
22-1-67

*அன்பன்,*
கிருபானந்த வாரி.

# பொருள் அடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலக் குறிப்பு | 1 |
| 2. | பொது விளக்கம் | 9 |
| 3. | முருகன் தோற்றம் | 10 |
| 4. | ஆறுபடை வீடுகள் | 12 |
| 5. | தல விளக்கம் | 14 |
| 6. | தற்காலம் ஊரின் நிலை | 16 |
| 7. | கோயில் அமைப்பு | 18 |
| 8. | சுவாமிநாதன் சிறப்பு | 22 |
| 9. | தலபுராண நூல்கள் | 22 |
| 10. | தீர்த்தங்கள் | 23 |
| 11. | குருவாய் உபதேசம் செய்த வரலாறு | 26 |
| 12. | கண்கொடுத்த விநாயகர் வரலாறு | 30 |
| 13. | மீனாக்ஷி சுந்தரேசர் வரலாறு | 30 |
| 14. | இந்திரன் யானைவிட்ட வரலாறு | 31 |
| 15. | பூமிதேவி தலவிருக்ஷ வரலாறு | 31 |
| 16. | சுவாமிநாத சுவாமி தோத்திரத் தொகுப்பு | 35 |

# ஸ்ரீ சுவாமிநாதசுவாமி தேவஸ்தானம்
## சுவாமிமலை.

அறங்காவலர் குழுத் தலைவர் :

திரு டி. எஸ். சுவாமிநாத உடையார், எம். எல். ஏ.,

அறங்காவலர்கள் :

திரு டி. வி. சுப்பிரமணிய அய்யர்,

திரு வி. எஸ். டி. திருமலைவேலு பிள்ளை,

திரு ஆர். சுப்பிரமணியம், பி .ஏ.,

திரு எஸ். எஸ். ராமசாமி உடையார்.

நிர்வாக அதிகாரி :

திரு. எஸ். சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்.,



ஓம் பிரணவ உபதேசம்

கிழக்கு கோபுரவாசலின் தோற்றம்

உ

ஸ்ரீ சுவாமிநாதன் துணை.

## விநாயகர் துதி

*எண் கொடுத்த மன்னெஞ்சக் மெண்ணிய*
*வண் கொடுத்த வரம்பெறு வாய்மையாற்*
*கண் கொடுத்த கணபதி தாள்மலர்*
*பண் கொடுத்த மொழியால் பகருவாம்.*

## முருகன் துதி

*நீரகத்தே தனை நினையும் அன்பினோர்*
*பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்*
*தாரகத் துருவமாந் தலைமை யெய்திய*
*ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்.*

# தலக் குறிப்பு

## 1. தலப்பெருமான்:-

(மேற்கோவில்) ஸ்ரீ சுவாமிநாதசுவாமி வலதுகையில் தண்டமும், இடது கையை இடுப்பில் அமர்த்தியும் மூன்றாவது சுற்றில் மலையின்மேல் காட்சி தருகிறார்.

## 2. தல விநாயகர்:-

கண்கொடுத்த விநாயகர் (நேத்திர விநாயகர்) மலையின்மேல் ஸ்ரீ சுவாமிநாதசுவாமி துவஜஸ்தம்பத்தின் முன் தெற்கு முகமாய் காட்சி தருகிறார்.

3. (கீழ்க்கோவில்) முதற் பிரகாரத்தில் உள்ள சிவபெருமான் ஸ்ரீ மீனாக்ஷி அம்மனும், சுந்தரேஸ்வரரும்.

## 4. தலப்பெயர்:-

இலக்கியத்தில் வரும் பெயர் ஏரகம் – ஏர் (அழகிய) அகம் – (முருகன் அமர்ந்த இடம்) (2) சுவாமிமலை (3) குருமலை தாத்ரிகிரி (4) சுந்தராசலம் (5) சிரகிரி (6) சிவகிரி என்பன. (சிலப்பதிகாரம்) (அரும்பத உரைப்படி).

### 5. தலச்சிறப்பு:-

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருமுன் இந்திரன் விட்டுப் போன யானை உள்ளது. பிரபவ முதல் 60 ஆண்டுகளின் தேவதைகள் 28ம் - 32 ஆக 60 படிகளாக உள்ளனர் என்பது ஐதீகம். ஆறுபடை வீடுகளில் நான்காவது, சிவபெருமானுக்கு ஓங்கார மந்திர உபதேசம் செய்த தலம். சிவபெருமானே சுவாமிமலை எனப் பெயரிட்டார்.

### 6. பக்கத்தில் உள்ள சிவஸ்தலங்கள்:-

(தெற்கு) திருவலஞ்சுழி (இந்த தேவஸ்தானத்தின் நிர்வாகத்திற்குட்பட்டது). திருச்சக்தி முற்றம், திருப்பட்டீஸ்வரம் முதலியனவும், வடக்கில் இன்னம்பூர், விஜயமங்கை, திருப்புறம்பயம் முதலியனவும், கிழக்கில் கும்பகோணம் கொட்டையூர் முதலியனவும், மேற்கில் திருவைகாவூர், தென்குரங்காடுதுறை, திருப்பாலைத்துறை முதலியனவும். தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்த திருமண்டங்குடி என்ற விஷ்ணு க்ஷேத்திரமும் உள்ளன.

### 7. பூஜை முறை:-

காரணாகம முறைப்படியும், குமார தந்திர முறைப்படியும் பூஜை முதலியவை நடந்து வருகின்றன.

### 8. பூஜா காலங்கள்:-

1. உஷக்காலம் (காலை 6 மணி பால் நிவேதனம் சன்னதி திறத்தல்) 2. காலை சந்தி. 3. உச்சிக்காலம். 4. சாயரக்ஷை 5. இரண்டாங்காலம் 6. அர்த்தஜாமம்.

### 9. கோயில்:-

செயற்கை கட்டுமலைக்கோவில். தரைமட்டமிருந்து 60 அடி உயரம் கொண்டது. நீளம் 300 அடிகள், அகலம் 295 அடிகள். கீழக்கோபுர வாசல் இருப்பினும் தெற்கு வாசலில் தான் ராஜகோபுரம் உள்ளது.

பஞ்சக்குரோச யாத்திரைத் தலங்கள் (ஸ்தலபுராணப் படி உள்ளூர் சாம்பமூர்த்தி பாகவதர் பதிப்பு).

1. சுவாமிமலைக்கு தெற்கே திருவலஞ்சுழி முதறகுரோசம்

2. வடமேற்கில் உள்ள திருப்புள்ளப்பூதங்குடி இரண்டாவது குரோசம்.

3. வடகிழக்கில் உள்ளது குமாரபுரம் (ஏரகரம் என்ற ஊர்) மூன்ருவது குரோசம்.

4. தென்கிழக்கில் உள்ள கும்பகோணம் என்ற திருக்குடந்தை நான்காவது குரோசம்.

5. (திருவேரகம்) என்ற சுவாமிமலை. ஐந்தாவது குரோசம்.

## படைவீடுகளின் ஒன்று.

1. திருப்பரங்குன்றம் மூலாதாரத்தலம். முருகன் தெய்வயானையை மணந்த தலம்.

2. திருச்செந்தூர் சுவாதிட்டானத்தலம். சூரபன்மனை கொன்ற தலம்.

3. திருவாவினங்குடி (பழனி) மணிபூரகத்தலம். பழம் பெருததினல் சினந்து தங்கிய தலம்.

4. திருவேரகம் (சுவாமிமலை) அநாகதத்தலம். தந்தை சிவபெருமானுக்கு உபதேசம் செய்த தலம்.

5. குன்றுதோருடல் (திருத்தணி என்றும் கூறுவர்) விசுத்தித் - தலம். வள்ளியம்மையை மணந்த தலமென்றும் கூறுவர்.

6. பழமுதிர்சோலை - ஆக்ஞைத்தலம் - மயிலில் அமர்ந்து காக்ஷி தந்த தலம்.

குறிப்பு:- உடம்புக்குள்ளே இறைவனைக்காண மூலாதாரம் லிங்கம், நாபி, இருதயம், கண்டம் புருவத்தின் நடுபாகம், சிரசு என்றும் ஆறுவாயில்களையும் ஆறுபடை வீடுகள் என்றும் சொல்லுவார்கள். இவைகளுள் இதயஸ்தானத்தைச் சுவாமிமலை எனவும் கூறுவதுண்டு.

## பிரகாரங்கள் (சுற்றுகள்)

1. ஒன்றுக்குமேல் ஒன்ருக கீழ்ச்சுற்று, நடுச்சுற்று, மேல் சுற்று அதாவது மலைக்கோயில் என மூன்று சுற்றுகள்.

2. தல விருக்ஷம்:- பூமிதேவியே மரமாக உருவெடுத்த தாத்ரீ விருக்ஷம். (அதாவது நெல்லி மரம்)

## 1. கோயில் பிரிவு:-

ஆண்டிற்கு சுமார் மூன்று லட்சம் ரூபாய் வருமான முள்ள முதல் வகுப்பு கோயில். சென்னை அறநிலைய பாது காப்பு இலாகாவின் அதிகாரத்திற்கு உட்பட்ட அறங் காவலர்கள் நிர்வாக அதிகாரி இவர்களின் நேரிடை நிரு வாகத்தில் உள்ள கோயில். இக்கோயிலுக்கு நஞ்சை சுமார் 117 ஏக்கர் 69 செண்டும், புஞ்சை 156 ஏக்கர் 51 செண்டும் நிலங்கள் உள்ளன.

## 2. திருப்பணிகள்:-

மலைக்கோயில் மட்டும் பழைய திருப்பணியாக இருக் கிறது. கிருதவீரியன் என்ற அரசன் செய்த சிவாபசாரம் இத்தலத்தில் தீர்ந்து அவனுடைய மகனை கார்த்த வீரிய மன்னன் என்பவன் ஸ்ரீசுவாமிநாதன் மலைக்கோயில் சுவாமி கற்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்தான் என்ற விபரம் கர்ணபரம்பரைச் செய்தி என்று ஸ்தல புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அதன் முன்புள்ள மகாமண்டபத்தையும் கீழ்க்கோயில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசர் ஆலயம், உற்சவ மண்டபம், படிகள் முதலிய திருப்பணி கள் சிவனேயச் செல்வரான தனவைசியர் கானுடுகாத்தான் திருவாளர் வெ. அருணுசலம் செட்டியார் அவர்கள் செய் தார்கள். அதன் பின்பு தேவஸ்தான பல நிர்வாகஸ்தர் களால் தெற்கு கோபுரமும், பத்தி மண்டபம், திருமண மண்டபம், யாத்ரீகர் விடுதி, விருந்து மண்டபம், புதிய அலுவலகக் கட்டிடம் முதலியன திருப்பணிகள் செய்யப் பட்டன.

## 3. நடக்கவேண்டிய திருப்பணிகள்:-

| | |
|---|---|
| 1. மூன்றும் பிரகாரம் மேற்கு வடக்கு மதில் கள் ரிப்பேர் சிமெண்டு பூச்சு வேலை செய்ய | ரூ. 3000 |
| 2. அலுவலகம் முன்பாக மண்டபம் வரை உள்ள இடைவெளியை மேலே மூட (ஆர். சி. சி. ரூப்) | 1250 |

| | ரூ. |
|---|---|
| 3. தவக்கிரகம் மேல் மண்டபம் பழுதானதை நீக்கிவிட்டு மறுபடியும் புதியதாக கட்டவேண்டியது. | 1000 |
| 4. முடி எடுக்கும் கொட்டகைக் கட்டிடம் கட்ட | 6900 |
| 5. அலுவலகத்தின் வடக்குப் பக்கத்தில் பாத்திரங்கள் வைக்க அறை கட்ட | 5700 |
| 6. சந்திர புஷ்கரணி குளம் மூடுவதற்கு | 3800 |
| 7. யாத்ரீகர் விடுதிக்கு சேர்க்கைகள் செய்யும் வேலை | 9000 |
| 8. திருவலஞ்சுழி ஆலயத்தில் மின்சார ஓயரிங் செய்ய | 3800 |
| 9. மடப்பள்ளிக்கும் 3-ம் பிரகாரம் தெற்கு மண்டபத்திற்கும் உள்ள இடைவெளியை மூட (மேல் கூரை) சிமெண்ட் காங்க்ரீட்டினல் கட்ட வேண்டியதற்கு | 10000 |
| 10. திருவலஞ்சுழி இரண்டாம் பிரகாரம் தளவரிசை | 4900 |
| 11. சுவாமிநாதசுவாமி கோயில் 3-ம் பிரகாரம் தளவரிசை போட எஸ்டிமேட் துகை | 20000 |
| 12. யாத்ரீகர்கள் விடுதி சிமெண்ட் ரோடு மேலும் அலங்கார வளைவு | 14000 |
| 13. நிர்வாக அதிகாரி குடியிருப்பு வீடு | 16000 |
| 14. சிப்பந்திகள் குடியிருப்பு வீடுகள் | 24000 |

## 4. வாகனங்கள் வெள்ளியில்:-

| | |
|---|---|
| தங்கமுலாம் பூசிய | -- மயில் வாகனம் |
| வெள்ளி | -- மயில் வாகனம் |
| வெள்ளி | -- சிறிய ரிஷப வாகனம் |
| வெள்ளி | -- குதிரை வாகனம் |
| வெள்ளி | -- மூஷிக வாகனம் (மூஞ்சூறு வாகனம்) |
| வெள்ளி | -- ரதம் |
| வெள்ளி | -- படிச்சட்டம் பல்லக்கு முதலியன |

## 5. மர வாகனங்கள்:-

யானை வாகனம், பூத வாகனம், இடும்ப வாகனம், காமதேனு வாகனம்.

## 6. திருவாபரணங்கள்:-

சுவாமிநாதசுவாமிக்கு தங்க கவசம், சுவர்ணபுஷ்ப மாலை, ரத்ன கிரீடம், ரத்ன வேல், வைர பதக்கம், திலகம், ஷட்கோண பதக்கம், பவுன் காசுமாலை, பதக்கங்கள் முதலியன உள்ளன. (சொர்ண புஷ்பமாலை, 4 சரங்களிலும் சகஸ்ரநாம மந்திரம் பொரிக்கப்பட்டது). கோடி அர்ச்சனை கமிட்டியாரால் சமர்ப்பிக்கப்பட்டது. ஷை நகைகளின் மதிப்பு சுமார் ஐந்து லட்ச ரூபாய்.

## 7. இத்தலத்தைப் பற்றிய துதிப்பாடல்கள்:-

1. அருணகிரிநாதர் திருப்புகழ் நாற்பது பாடல்கள். 2. நக்கீரர் திருமுருகாற்றுப்படை. 3. சுவாமிமலை கடுக்கன் தியாகராஜ தேசிகர் இயற்றிய நவரத்ன மாலை. 4. திருவேரக வெண்பா. திருவேரக சதகம். 5. கபிஸ்தலம் வேலையரவர்களியற்றிய திருவேரக அந்தாதி. 6. எவ்வளூர் இராமசாமி செட்டியார் இயற்றிய துதிமஞ்சரி. 7. கோவை ஸ்ரீ நடேசக் கவுண்டர் இயற்றிய பிள்ளைத்தமிழ் மற்றும் காவடிசிந்து, வழிநடைச் சிந்து பதிப்புக்கு வராத ஏட்டுச் சுவடி பிள்ளைத்தமிழ் மற்றும் பல சங்கீத வித்வான்கள் இயற்றியுள்ள சாகித்யங்கள் முதலியனவும், வடமொழியில் சுவாமிநாத புஜங்கம், பஞ்சரத்ன சுலோகம், கரீவலம்ப சுலோகங்கள், சுப்பிரபாதம், தேவேந்திர அஷ்டோத்திரம் முதலியனவும் உள்ளன.

## 8. சமயப்பிரசாரம்:-

முக்கிய திருவிழா நாட்களில் தக்கார்களைக்கொண்டு சமய சொற்பொழிவுகளும், தெய்வப்பாட்டுகள் நிறைந்த இசை விருந்தும் நடத்தப்படுகின்றன. மார்கழி மாதத்தில் நாள்தோறும் பாவைப்பாடல்களும் அதிகாலையில் ஒலிபரப்பப்படுகிறது. பாவை மாநாடும் நடத்தப்படுகிறது.

## 9. பொதுஜன வசதி:-

சுவாமிநாதசுவாமி பல அன்பர்களுக்கு குல தெய்வமாக இருப்பதாலும் அன்பர்களுக்கு வேண்டும் நலன்களை வழங்கும் அருளாளனுக இருப்பதாலும். காவடி எடுத்தல், முடி எடுத்தல், அபிஷேகம் செய்தல் முதலியன நாள்தோறும் பல நடந்து கொண்டிருக்கின்றன. பலபாகங்களிலிருந்து அன்பர்கள் வந்தவண்ணம் இருப்பதால் ஒவ்வொரு நாளும் திருவிழாவாகவேயிருக்கும். பிரதி வியாழக்கிழமை தங்கக்கவசமும், பிரதி செவ்வாய்க்கிழமை சொர்ண புஷ்ப மாலையும் பொதுஜன தரிசனத்துக்காக சாத்தப்படுகிறது. மற்றவேளைகளில் சாத்தி தரிசிக்கவிரும்பும் அன்பர்கள் ரூ. 35-00 தேவஸ்தானத்தில் கட்டணம் கட்டினுல் பூரா நகைகளையும் சாத்தப்படும்.

திருமணங்கள் சுவாமிநாதன் திருக்கோயிலில் ஆண்டொன்றிற்கு 1000க்குமேற்பட்ட திருமணங்கள் நடைபெறுகிறது. திருமணத்திற்கு புஷ்பம், மேளம், புரோகிதம் முகூர்த்த சாமான்கள் (மட்பாத்திரம் உள்பட) தேவஸ்தானத்தில் கொடுக்கப்படுகிறது. அதற்கு கட்டணமாக ரூ. 25-ம், திருமண மண்டபத்திற்கு தனியே ரூ. 5-00ம் வாங்கப்படுகிறது. தேவஸ்தானத்தில் யாத்ரீகர் விடுதிகளும் நாள் 1க்கு ரூ. 2-ம். டைனிங்ஹால் அதாவது திருமண விருந்து மண்டபம், பாத்திரம் வகையரு உள்பட ஜல வசதியுடன் குறைந்த கட்டணமாக நாள் 1-க்கு ரூ. 30 வீதம் கொடுக்கப்படுகிறது. சமுக்காளங்களும் தேவஸ்தானத்தில் சிறிது துகை கட்டி பெறலாம். திருமணங்களாலும், கிருத்திகை நாட்களிலும் இதர விசேஷ தினங்களிலும் பொதுஜனங்கள் நிறைய வருவதால் தேவஸ்தானத்தில் மிகுந்த வசதிகள் செய்து தரப்படுகிறது.

இந்த தேவஸ்தானத்தில் நிருவப்பட்டுள்ள சித்த வைத்திய சாலையில் பொதுமக்களுக்கு இலவச வைத்தியம் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் பல வசதிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 10. தீர்த்தங்கள்:-

1. வச்சிர தீர்த்தம் (கிணறு) 2. குமாரதாரை (காவிரி ஆறு) 3. சரவண தீர்த்தம் 4. நேத்திர புஷ்கரணி 5. பிர்ம்ம தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்கள் உள்ளன.

### 11. அருள்பெற்றவர்கள்:-

இந்திரன், சோழமன்னன், யக்ஞமித்திரன், சுகர், பிரகதாசுவர், ரவிமித்ரன், வசு, கார்த்தவீரியன், பாண்டிய மன்னன், சரவணன், சுமதி, பிரம்மன் முதலியவர்கள்.

### 12. பசு மடம்:-

திருப்பனந்தாள் காசி மடம் காலை கட்டளைக்கு வருடம் 1-க்கு ரூ. 730. ஷை மடத்திலிருந்து ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. ஸ்ரீலஸ்ரீ ஆதீனகர்த்தரின் திருவுளம் இசைந்து இட்ட பசுக்கட்டளை வருடம் 1க்கு ரூ. 900 காசி மடம் நன்கொடையாக ஏற்படுத்தப்பட்டு அத்தொகையிலிருந்து ரூ. 500 பசுவுக்கும், தீவன செலவிற்கு ரூ. 400ம் பகுத்து பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஷை பசுவின் பால் சுவாமிநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்ட பின் குழந்தைகளுக்கு கொடுக்கப்படுகிறது.

13. பாப்பாநாடு உச்சிக்கால கட்டளை.

14. புதுக்கோட்டை தொண்டமான் சாயரட்சை கட்டளை முதலியவைகளும் நடத்தப்பட்டு வருகிறது.

## முக்கிய திருவிழாக்கள்

(மாதப்பஞ்ச பருவங்கள்) மாதப் பிறப்பு, சஷ்டி, அமாவாசை, பௌர்ணமி, விசாகம், சுக்கிரவாரம், பிரதோஷங்கள் முதலியன.

| | | |
|---|---|---|
| சித்திரை உத்சவம் | – | பிர்மோத்சவம் |
| வைகாசி ,, | – | விசாகம் |
| ஆவணி ,, | – | பவித்ரோத்சவம் |
| புரட்டாசி ,, | – | நவராத்திரி உத்சவம் |
| ஐப்பசி ,, | – | கந்தசஷ்டி உத்சவம் |

கார்த்திகை ,, – திருக்கார்த்திகை,
பிர்ம்மோத்சவம்
மார்கழி ,, – திருவாதிரை,
திருப்பள்ளியெழுச்சி பூஜை
தை ,, – புஷ்ய பிர்ம்மோத்சவம்
பங்குனி ,, – வள்ளிகல்யாண உத்சவம்

சித்திரை, கார்த்திகை, தை மாதங்களில் நடைபெறும் உத்சவங்கள் துவஜாரோகணத்துடன் நடைபெறும் பிர்மோத்சவமாகும்.

## பொது விளக்கம்

சச்சிதானந்த தற்பவ சிவமே தனது பின்ஞ சக்தியால் சகல பிரபஞ்சவடிவமாய் மாறி அபின்ஞ பிரக்ருதியால் மனமொழிக்கும் எட்டாத அகண்டமான ஒன்ருகியும் இருந்துகொண்டு ஒவ்வொரு நிமித்தத்தால் தோன்றிய பற்பல அருள்மேனிகொண்டுள்ள வடிவங்களுள் யாவராலும் வெல்ல இயலாத அசுரசம்கார நிமித்தம் அருள் வடிவுடன் அவதரிக்கிருன். சிவனே குகன், குகனே சிவன் என்பதும் ஆதலின் நமது சக்தி ஆறுமுகன், **"அவனும் யாமும் பேதம் அன்ருல்"** என்ற கந்தபுராணக் குறிப்பில் அறியலாம். கேவலம் சகலம் சுத்தம் என்ற நிலேகளே போக்கி மூத்த ஆத்மாக்களின் நிலேயில் சேர்த்து அகப்பற்று புறப்பற்று என்ற இருவகைப்பற்றுக்களும் அற்ற இடமாய் அமைந்ததையே இருதிருவடிகளாகவும், ஞானத்தையே உருவமாகவும், மூன்று சக்திகளே திருக்கண்களாகவும், இப்பரந்த உலகத்தையே தனது திருக்கோயிலாகவும் கொண்டு ஒப்பற்ற தனி முதற் சுடராகவும் திகழும் அரும்பெரு மணிக்கே முருகன் எனப் பெயர் ஏற்பட்டதெனலாம்.

முருகன் ஒரு தமிழ்க்கடவுள். தமிழ் மக்களின் தெய்வமும் அவனே. இவன் குறிஞ்சி நிலக்கடவுளாக "சேயோன், மேயமைவரை உலகம்" என்ற தொல்காப்பியம் அடியால் கூறப்பட்டுள்ளது. முருகன் என்ற சொல்லிற்கு இளமை, மணம், அழகு, கடவுள் எனப்பொருளாகும். முருகன் கலியுகத்தில் அடியார்களுக்குக் கண்கண்ட

தெய்வமாக அருள்பாலிக்கிருர். இதனை குமர குருபர அடிகள் ஐந்து வயதிலே பேசும் திறமை பெற்ற அதிசயத்தைக் கூறும் பொழுது "காக்கு முருகன் கருணையால் மூகன் வாக்குப் பெற்ற வகையுங் கேண்மின்" என்று முருகன் அகவல் அவன் பெருமையைக் கூறிற்று. "வேண்டிய வரங் கொடுப்பான். மெய்கண்ட தெய்வம் இத்தெய்வமல்லால் புவியில் வேறு இல்லை. என்று வைத்தீஸ்வரன்கோயில் (புள்ளிருக்கு வேளூர்) முத்துக்குமரனை குமரகுருபர அடிகள் பாடித்துதிக்கிருர்.

## முருகன் தோற்றம்.

### 1. கந்தபுராணத்தில் கண்டவாறு:-

ஒருகால் கைலைமால் வரையில் அத்தன் சிவபெருமானும் அம்மை உமா தேவியாரும் எழுந்தருளி இருந்தார்கள். அப்பொழுது அசுரர்கள் கொடுமை தாங்காது தேவர்கள் அங்கு வந்து சிவபெருமானிடம் தங்கள் குறையை வெளியிட்டனர். சிவபெருமான் திருவுள்ளம் இரங்கினுர். தமது ஈசானம் தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து முகங்களுடன் ஆருவது முகமாகிய அதோ முகத்தையும் சேர்த்து ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகளை வெளியே விடுவித்தார். அவை தேவர்களை மிகவும் அச்சமுறித்தின. ஆகவே அவைகளைச் சிவபெருமான் தம் கைகளால் எடுத்து வாயு தேவனிடம் கொடுத்தார். அவனும் அத்தீப்பொறிகளை தரிக்க ஆற்ருமல் அக்னி தேவனிடம் கொடுத்தார். அவராலும் அதை தாங்கமுடியாமல் கங்கை நீரில் ஒதுக்கினுர். கங்கையும் அவைகளைச் சரவண (நாணல்) காட்டில் ஒதுக்கினுள். அங்கு அந்த ஆறு தீப்பொறிகளும் சேர்ந்து முருக்வேள் அவதரித்தார். கார்த்திகை நக்ஷத்திரத்தின் தேவதைகளாகிய ஆறு பெண்கள் முலைப்பால் ஊட்டி அக்குழந்தைகளை மகிழ்வித்தார்கள். கார்த்திகை மாதர்கள் பொருட்டு ஆறு குழந்தைகளானுர். சிவபெருமான் உமா தேவியாருக்கு அக்காட்சியைக் காட்டினுர். அந்த ஆறு குழந்தைகளையும் அன்னை பார்வதி தேவியார் தம் கைகளால் எடுத்து ஒன்ருக அமைத்தாள். சிவபெருமான்

அந்த அருமைச் சேயைத் தன் கையால் எடுத்து உச்சி மோந்தார். அன்று முதல் அந்த முருகனுகிய குழந்தைக்குக் கந்தன் எனப்பேர் பெற்றனன். கவுரி தன் குமரன் என்று கந்த புராணம் இக்கருத்தை வெளியிட்டது.

பார்வதியின் சிலம்புகளில் இருந்து சிதறிய நவமணிகளில் இருந்து தோன்றிய நவசக்திகள் சிவபெருமானைக் கண்ணுல் காதலித்துக் கருவுற்றனர். அந்த நவ சக்திகளுக்கும் முறையே (1) வீரவாகு (2) வீரகேசரி (3) வீரமகேந்திரன் (4) வீரமகேஸ்வரர் (5) வீரபுரந்தரர் (6) வீரராட்சதர் (7) வீரமாத்தாண்டர் (8) வீராந்தகர் (9) வீரதீரர் என்னும் நவவீரர்கள் தோன்றினர். (இவர்களையே நவவீரர்கள் என அழைப்பார்கள்) இவர்களுள் ஒருவராகிய வீரவாகுவை அழைத்து நாரதர் இயற்றிய வேள்வியில் இருந்து தோன்றிய கொடிய ஆட்டுக்கிடாவைக்கொண்டு வரச்செய்து முருகன் அதன்மேல் அமர்ந்து எண் திசைகளிலும் அதனைச் செலுத்தி விளையாடினுன். முருகனுக்கு மயில் தவிர ஆட்டுக்கிடாவும் ஒரு வாகனமாயிற்று. மற்றும் முருகன் சூரபத்மனை போர் செய்ய எழுந்தபொழுது இந்திரன் மயிலாகவும், அக்னிதேவன் கோழிக்கொடியாகவும் இருந்து பணிபுரிந்தார்கள். மேலும் முருகனுக்கு யானைவாகனமும் உண்டு என்பதும் யானை மீது அமர்ந்து இருக்கும் முருகப்பெருமானை கஜவாகனர் என அழைப்பதும் உண்டு என்பதும், அம்முருகன் அமர்ந்த கஜேந்திரனுக்கு பிணிமுகம் என்ற பெயர் உண்டு என்பதும் "ஓடாப்பூட்கைப்பிணி முகம் வாழ்த்தி" என்ற திருமுருகாற்றுப்படை வரியால் உணரலாம். பதிற்றுப்பத்து என்னும் சங்கநூலும் "கடுஞ்சினவிறல் வேள் களிறு ஊர்ந்தாங்கு" என்ற வரியால் முருகன் யானை மீது அமர்ந்த நிகழ்ச்சியை உவமானமாக எடுத்துக்காட்டியது. இம்முருகப்பெருமானுக்கு கந்தன், அக்னிபூ, காங்கேயன் சரவணபவன், கார்த்திகேயன், கடம்பன், விசாகன், ஆறுமுகன், குகன், சுவாமிநாதன், குருநாதன், குருமூர்த்தி, இளையபிள்ளையார் என்றெல்லாம் சிறப்புத்திருநாமங்களும் உண்டு.

உள்ளத்தில் கொண்டு உகக்கும் உத்தமர்களுக்கு இதயகமலத்தில் வீற்றிருக்கும் தெய்வமே சுவாமிநாதன். அகரம், உகரம், மகரம், நாதம், பிந்து என்னும் ஐந்து வகையான ஓம்காரத்தின் உருவாய் திகழ்பவனே சுவாமி நாதன். அட்டமூர்த்தச் சொரூபமாய் விளங்குபவனே சுவாமிநாதன். அட்டாங்க யோகத்தின் முடிவில் நின்று அரும்பெரும் ஞான உபதேச தேசிகனுக விளங்குபவனே சுவாமிநாதன். தசாங்கங்களின் தத்துவப் பொருளாய் விளங்குபவனே சுவாமிநாதன். மெய்ஞானக் கண்ணைத் திறக்க வைத்து மெய்ப்பொருள்காட்டி இகபர வாழ்வு அளிப்பவனே சுவாமிநாதன். பிணி தீர்ப்பவன், பகை தீர்ப்பவன், குறை தீர்ப்பவன், நிறை அளிப்பவன், கண்டதும் காப்பவன், ஓலம் கேட்டதும் காப்பவன், நின்று காப்பவன், ஓடிவந்து காப்பவன், அதிகம் ஏன் யாருக்கும் எட்டாத நிலையிலிருக்கும் அவனே கருணை வடிவாய் சிவப் பழமாய் சிந்தனைக்குத் தேனுய் பிறவிப்பிணிக்கு மருந்தாய் சற்குருநாதனுக அருள்புரிகிறவன்.

## 2. ஆறுபடை வீடுகள்:-

(1) முருகன் அருள் தேங்கிய திருமேனிகொண்டு ஆங்காங்கு கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களின் தீராவினைகளையும் தீர்த்துக்கொண்டிருப்பானுயினும் சூரபதுமனை போர் செய்ய எழுந்தருளிய பொழுது அவனது படைகள் தங்கி இருந்த இடம் ஆறு. அந்த ஆறுஇடங்களை ஆறுபடை வீடுகள் என்றழைக்கிருர்கள். படை வீடுகள் என்ருல் படை தங்கிய இடங்கள் எனப்பொருளாகும். மற்றும் சிலர் படைவீடு தலைநகர் எனப்பொருள் கொண்டு முருகனுடைய ஆறு வீறுபெற்ற தலைநகர்களே அறுபடை வீடு என்றும் கூறுவார்கள். இன்னும் சிலர் திருமுருகாற்றுப்படை என்னும் சங்க நூலின் பெயர் பொருத்தம் கொண்டு ஆற்றுப்படுத்திய இடமே ஆறுபடை வீடு எனப்பெயரதாயிற்று என்றும் கூறுவார்கள். வேறு சிலர் முருகன் ஆறு நிலையில் எழுந்தருளியுள்ள தலங்களே ஆறுபடைவீடெனப் பெயர் பெற்றது. அந்த ஆறு படை வீடுகளாவன. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழனி) திருவேரகம் (சுவாமிமலை)



தெற்கு கோபுரவாசலின் தோற்றம்

தங்க மயில்வாகனத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

குன்றுதோருடல் (திருத்தணி) முதலிய பலமலைகள், பழமுதிர் சோலை என்பனவாகும். தந்தை சிவபெருமான் கையில் இருந்த பழத்திற்காக உலகை வலம்வந்து தங்கியது பழனியிலே. தந்தைக்கு பிரணவப் பொருள் அல்லது பஞ் சாட்சரப்பொருளை உணர்த்தியது சுவாமிமலை என்ற திரு வேரகத்திலே. வள்ளியை காதலித்தது திருத்தணியிலே. சூரபத்மனை வதைத்தது திருச்செந்தூரிலே. தேவேந்திரன் மகள் தெய்வயானையை மணந்தது திருப்பரங்குன்றத்திலே, மயிலில் அமர்ந்து மையல் கொண்ட அடியார்கட்கு அமுத மாய்க் காட்சி அளித்தது பழமுதிர்சோலையிலே என்றும் அடியார்கள் கூறுவார்கள். சுவாமிநாதப்பெருமானுகிய முருகன் ஆறுமுகம் கொண்டு அருள் செயல்களை செய் கின்ருன்.

(2) புறத்தே காணும் இந்த ஆறுபடைவீடுகளையும் அகத்தேகாணும் ஆறு ஆதாரத்தலங்களாகவும் குறிப்பிடு வதுண்டு. அவையாவன:-

1. திருப்பரங்குன்றம் – மூலாதாரத்தலம்.
2. திருச்செந்தூர் – சுவாதிஷ்டானத்தலம்.
3. திருவாவினன்குடி – மணிபூரகத்தலம்.
4. திருவேரகம் – அநாகத்தலம்.
5. குன்று தோருடல் – விசுத்தித்தலம்.
6. பழமுதிர்சோலை – ஆக்ஞைத்தலம்.

## 3. ஆறுமுகச் செய்கையாவன:-

1. சூரபன்மனை வதைத்து அழியாத பேரின்பவாழ் வைத் தருவது ஒருமுகம்.

2. வேதாகமங்களை முற்றுப்பெறச்செய்வது ஒருமுகம்.

3. உயிர்களின் மல இருளைப்போக்கி ஒளிபடர்வது ஒருமுகம்.

4. வள்ளி தெய்வயானைக்கு மோகம் அளிப்பது ஒருமுகம்.

5. அடியார்களைக் காப்பது ஒருமுகம்.

6. ஏறுமயில் ஏறி விளையாடுவது ஒருமுகம்.

(வேறு விதமாகவும் ஆறு முகங்களுக்கு விளக்கம் தருவதுண்டு).

## 4. அவனது பன்னிரு கைகளின் தன்மையாவன:-

அமுதம் அளிப்பது ஒரு கை-தழுவி அணைப்பது ஒருகை
மழைபொழியச் செய்வது ஒரு கை - மாலைகள்
அணிந்திருப்பது ஒரு கை
அஞ்சேல் என அபயமளிப்பது ஒரு கை - இடுப்பின்
இடது பக்கத்தில் அமர்த்தியிருப்பது ஒரு கை
தொடையில் சார்த்தியது ஒரு கை - வீரவளை
அணிந்திருப்பது ஒரு கை
மணி சேர்ந்தது ஒரு கை - போரில் அங்குசம்
ஏந்துவது ஒரு கை
கேடயம் சுழற்றுவது ஒரு கை-வாளேந்துவது ஒருகை

## 5. தல விளக்கம்:-

அன்பர்களின் ஆனந்த உள்ளமே மலையாகவும் பேரின்ப வெள்ளமே ஆருகவும் இன்பம் தரும் மேல் உலகமாகிய நாடே நகரமாகவும், ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்க்ஷரத்தையே குதிரையாகவும், ஐம்மலங்களையும் நசுக்கி எழும் சிவஞானமே யானையாகவும், அறிவையும், அன்பையும் மலர்களாகத் தொடுத்த கடம்ப மாலையே மலர் மாலையாகவும், நவநாதங்களையே முரசு என்னும் வாத்யமாகவும், சகல புவனங்களையும் ஆக்கி இயக்கும் தன்மையே ஆணையாகவும், ஆகிய தசாங்கங்கள் கொண்டு அடியார்களின் ஆறுமுகங்கொண்ட இதயகமலத்துக்குப் பக்கத்தில் உள்ள நாடியால் என்றும் எழுந்தருளி இருந்து புருவ வட்டத்தின் இடையே மனோன்மணம் என்ற இடத்தில் ஒளிர்விட்டுக்கொண்டிருக்கும் முருகப் பெருமானே திருவேரகம் என்ற மாபெரும் புண்ணியத் தலத்தில் சுவாமிநாதன் என்ற திருப்பெயருடன் கோயில் கொண்டு அருள்பாலிக்கிருன்.

6. திரு – எல்லாச் சிறப்புகளும், ஒருங்கே பொருந்திய, ஏர் – அழகிய, அகம் – படைவீடு. திருவேரகம் என்று தலத்தின் பெயராய் அமைந்தது. முருகப்பெருமானின் அருள் சக்தி அடங்கி அலைமோதும் இடமே திருவேரகம் என்ற தலமாகும் என்று தல புராணம் கூறுகிறது. இத் திருவேரகம் என்னும் பழம்பெரும் பதியே படைவீடுகள் ஆறில் நான்காவதாகும்.

7. திருவேரகம் என்னும் சுவாமிமலை தொன்மையான தலம் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முன்பு கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த சங்கப் புலவர்களின் தலைவரும், தருமிக்குப் பொற்கிழியின் பொருட்டு ஆலவாய் அண்ணலை சிவபெருமானே என்று தெரிந்தும் பொருள் குற்றம் குற்றமே என்று கூறியவரும், திருமுருகாற்றுப்படை ஆக்கிய பெருமான் நக்கீரர் தமது திருமுருகாற்றுப் படையில் 4-வது படைவீடாக இத்திரு வேரகத்தைக் கூறும்பொழுது பதின்மூன்றே வரியில் அத் தலச் சிறப்பு அங்குள்ளோர் தூய நடத்தை பூசனைச் சிறப்பு முதலியவைகளைச் சிறப்பித்துப் பேசியுள்ளார். அந்தணர் என்பது இங்கு ஆதிசைவர்களே குறிக்கப்படுகின்றனர். ஒருசிலர் திருமுருகாற்றுப்படையில் திருவேரகத்தைப்பற்றிக் கூறும்பொழுது புலராக்காழகம் புலர உடீஇ என்றுவரும் அடிகட்கு ஈர ஆடை அணிந்து பூஜை செய்யும் வழக்க முள்ள மலையாள நாட்டவரை குறிப்பதாகக் கொண்டு திருவேரகம் என்ற தலம் நாகர்கோவில் பக்கம் உள்ளது போலும் என்று எழுதுகிறார்கள். புலராக்காழகம் புலர உடீஇ என்பதினல் நன்ருக துவைத்து காயவைத்த ஆடையையும் குறிக்குமாதலாலும் இப்பக்கத்திய நாட்டு ஆசாரவழியாதலாலும் நக்கீரர் குறித்த திருவேரகம் சோழ நாட்டுத்தலமான சுவாமிமலையையே குறிக்கும் என்பது பல புலவர்களின் தீர்மானமாகும். அது ஒருபுறமிருக்க, இன் றைக்கு ஏறக்குறைய 450 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்த தலை சிறந்த முருக பக்தராயும், முருகன் பேச்சே மூச்சுக் காற்ருகவும் கொண்ட அருணகிரிநாதர் இத்தலத்திற்கு சுமார் 40 திருப்புகழ் பாடல்கள் அருளி யுள்ளார். அப்பாடல்களில் சுவாமிமலையே திருவேரகம்

என்பதற்கு முருகன் உபதேசம் செய்த வரலாற்றினைத் துதித்தும் காவிரிக்கு நேர்வடக்கே சுவாமிமலை என்ற திருவேரகம் உள்ளது என்றும் "முது மாமறைக்கு மாபொருளே உரைத்த குருநாதா" என்றும், "தகையாதெனக் குன்னடி காணவைத்த தனியேரகத்தில் முருகோனே" என்றும் சோழநாட்டுச் சுவாமிமலை என்றும், இன்னும் பலவாற்றுலும் இத்தலமே திருவேரகமென்பதாயும் உபதேச மூர்த்தியே குருநாதன் என்றும் திட்டவட்டமாய் குறிப்பிடுகிருர். மேலும் தருகாவிரிக்கு வடபாரிசத்தில் சமர்வேல் எடுத்த பெருமானே என்றும் அருணகிரிநாதர் குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும். திருவேரகம் என்ற இத்தலத்திற்கு சுவாமிமலை, குருமலை, தாத்ரீகிரி, சுந்தராசலம் என்றெல்லாம் பெயர்களுண்டு. இத்தலத்திற்கு தெற்கில் காவிரி ஆறும், அரிசொல் நதியென்ற அரசலாறும் ஓடுகின்றன.

8. சிவபெருமானுக்கு முருகப்பெருமான் பிரணவமாகிய ஓங்காரப்பொருளை (பஞ்சாட்சரம்) செவியில் எடுத்துறைத்த பொழுது சிவபெருமான் தன் குமாரனைப் பார்த்து நீயே சுவாமி ஆதலால் இத்தலம் சுவாமிமலை என வழங்குக என்று ஆணையிட்டபடியால் இத்தலத்துக்கு சுவாமிமலை யெனப் பெயர் ஏற்பட்டது. முருகன் குருநாதனுக எழுந்தருளியுள்ளதால் குருமலை எனப்பெயர் ஏற்பட்டது. பூமி தேவியே இத்தலத்தில் நெல்லி மரமாக இருக்கிறபடியால் தாத்ரீ (பூமி) கிரி (மலை) தாத்ரீகிரி எனப்பெயர் ஏற்பட்டது. இயற்கை அழகு தவழும் இடமானதால் சுந்தராசலம் (அழகான மலை) எனவும் பெயர் ஏற்படலாயிற்று. இத்தலத்தில் முருகன் தாரக மந்திரவடிவாய் எழுந்தருளியிருக்கிருர் என்பதை "தாரகத்துருவமாம் தலைமையெய்திய ஏரகத்தறுமுகன்" எனக் கச்சியப்ப சிவாச்சாரியாரும் "புன்னம் கடுக்கைப்புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே" எனக் கந்தர்கலி வெண்பாவில் ஸ்ரீ குமர குருபரசுவாமிகளும் திருவாக்கிட்டனர்.

### 9. தற்காலம் ஊரின் நிலை:-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தாலுக்கா சுவாமிமலையென்பது ஓர் சிறிய அழகிய நகரம். கும்பகோணம் திருவையாறு பஸ்பாதையில் கும்பகோணத்திற்கு

மேற்கே 5 மைல் தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து நெ. 1. டவுன்பஸ்ஸில் இங்குவர வசதி உண்டு. கும்பகோணம் தஞ்சாவூர் ரயில் பாதையில் இடையே உள்ள சுவாமிமலை என்ற ரயில் நிலையமிருந்து வடக்கே ஒரு மைல் அரசலாற்றையும் காவிரியாற்றையும் கடந்து அடுத்து உள்ள ஊராகும். ரயில் நிலையமிருந்து சுவாமிமலை வர ஒற்றைமாட்டு வண்டிகள் வசதியுண்டு. இடையே கும்பகோணம் தஞ்சை நெடுஞ்சாலைக்கு அருகே திருவலஞ்சுழி என்ற தேவாரப்பாடல் பெற்றதும் சிற்ப வேலைப் பாடுள்ளதுமான சுவேத விநயகர் கோயில் உள்ளது. சுவாமிமலை என்ற இச்சிற்றூரில் கோவிலைச்சுற்றி நான்கு தேரோடு வீதிகளும் மற்று பல தெருக்களும் கடைத்தெருவும் கொண்ட ஊராகும். இவ்வூரில் சுமார் 6000 ஜனத்தொகையுண்டு. இவ்வூரில் கழக உயர்நிலைப்பள்ளியும், தனியார் நடத்தும் உயர்தரப்பள்ளியும், ஆரம்பப்பள்ளிகளும், தமிழக அரசாங்க சிற்பக்கலைப்பள்ளியும் உதவிப் பதிவாளர் அலுவலகமும், தேவஸ்தானத்தில் நடத்தப் பெறும் இலவச சித்த வைத்தியசாலையும், அரசாங்க மருத்துவ மனையும், மற்றும் அஞ்சல் நிலையம் (டெலிபோன் வசதியுடன்) தெற்குவீதி வடக்கு வீதிகளில் பல மடங்களும் உள்ளன. தஞ்சை மாவட்டத்திலே பெரிய வியாபார ஸ்தலமாகும் கும்பகோணத்திற்கு அடுத்து வழி நடுவே பல சிற்றூர்களைக்கொண்டு வளர்ந்துவரும் சுவாமிமலை விரைவில் கும்பகோண நகரத்தின் ஒரு பகுதியாகவே ஆகிவிடக்கூடிய வாய்ப்பும்பெற்று விளங்குகிறது. சுவாமிமலைக்கு அடுத்துப் பல சிவ க்ஷேத்திரங்களும், விஷ்ணு ஸ்தலங்களும் உள்ளன. ஸ்ரீ வைணவ ஆழ்வார்களுள் அரங்கன் அன்றி மற்றோர் கடவுளையும் பாட விரும்பாத தொண்டரப்பொடி ஆழ்வார் அவதரித்த திருமண்டங்குடியும் சிவராத்திரிப்பெருமை பெற்ற திருவைகாவூர் என்ற பாடல் பெற்ற சிவ ஸ்தலமும் இவ்வூருக்கு அருகே உள்ளன. இவ்வூரில் இசை வல்லுநர்கள் பலர் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். நல்ல வளமுள்ள சோலையாகி திகழும் ஊரானதால் காய்கறி, நெல் முதலியன எளிதில் கிடைக்கும் ஊர்ரகவும், நல்ல காற்றேட்டமுள்ள வசதியுள்ள ஊராகவும் இருக்கிறது.

## 10. கோயில் அமைப்பு:-

சுவாமிமலைக் கோவில் தரை மட்டத்திலிருந்து சுமார் 60 அடி உயரமுள்ள செயற்கைக் குன்றாகும். மேலே உள்ள ஸ்ரீ சுவாமிநாதசுவாமி சன்னதி மட்டும் பழங்காலத் திருப்பணியுடனும், மற்றுள்ள பகுதிகள் புதிய திருப்பணிகளுடனும் விளங்கும் கோயிலாகும். இக்கோயிலுக்கு மூன்று வாசல்கள் உள்ளது. அவற்றுள் கீழ்ப்பக்கமும், மேல்பக்கமும் மொட்டையான வாசலும் தெற்குப் பக்கம் மட்டும் 5 நிலைகளையுடைய கோபுரமும் உள்ளன. கோபுரம் சுதையாலான சித்திர வேலைப்பாட்டுடன் அழகாக உள்ளது. இந்த வாயிலே முக்கிய வாயிலாக உள்ளது. முன் மண்டபமும் அதனை அடுத்து மேல்புறமாய் தேவஸ்தான அலுவலகமும் உள்ளன. கோவிலைச்சுற்றி நீண்ட மதில்கள் இருக்கிறது. சுவாமிநாதன் சன்னதி மேல்க்கோயில் என்றும் மீனாட்சி சுந்தரேசர் சன்னதி கீழ்க்கோவில் என்றும் வழங்குகிறது.

தெற்கு கோபுரவாசல் வழியாய் உள்ளே சென்றால் இடது புறம் மிக நேர்த்தியான மாளிகையாய் திகழும் விசாலமான திருமண மண்டபம் உள்ளது. அதனை அடுத்து உள்ளே சென்றால் பெரிய சுற்று மண்டபமும் அதில் வரகுண பாண்டியனால் பூஜிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசர் சன்னதியும் இருப்பதைக் காணலாம். தென்புரம் முறையே தக்ஷிணாமூர்த்தி, ஸ்தல விநாயகர், சோமாஸ்கந்தர் (உத்சவ மூர்த்தம்) விசாலாக்ஷி சமேத விஸ்வநாதஸ்வாமி சமயாச்சாரியார்கள் நால்வர் ஸ்ரீ வள்ளி தெய்வயானையுடன் சுப்ரமணிய சுவாமியும் எழுந்தருளியுள்ளார்கள். வடக்குப் பிரகாரத்தில் துர்க்கை, நவக்கிரகங்கள், சண்டேசர் இவர்களின் சிறு சன்னதிகளும் உள்ளன. இங்கு வஜ்ஜிர தீர்த்தமென்ற முக்கிய தீர்த்தக் கிணறு கம்பிபோட்டு பாதுகாப்புடன் இருக்கிறது. இத் தீர்த்தமே ஸ்ரீ சுவாமிநர்தனுக்கு அபிஷேகத் தீர்த்தமாகும். வடகிழக்கில் உத்சவ மண்டபம் (வசந்த மண்டபம்) இந்த மண்டபத்தில் திருவிழாக் காலங்களில் உத்சவ மூர்த்திகள் எழுந்தருளுவர். கீழ்க்கோயில் மேற்கு பிரகாரத்தில் யானை கட்டுகிற மண்டபமும். கீழ்ச்சுற்றில் வல்லபகணபதியும்

பத்தி மண்டபத்தில் மயில் மண்டபமும், படிக்கட்டலை அறைகள், மான் கட்டும் மண்டபம், திருமடப்பள்ளி தல விருக்ஷம் நெல்லி மரம் முதலியனவும் உள்ளன.

11. இக்கோவிலில் ஒன்றுக்குமேல் ஒன்ருய் அமைந்த இரண்டாவது சுற்றுக்கு ஏறும்படிக்கட்டுகள் வசந்த மண்டபத்தின் கீழ்ப்பக்கம் தொடங்குகிறது. பிரபவ விபவ என்ற அறுபது வருஷ தேவதைகளும் 60 படிகளாக அமைந்துள்ளது. இவ்வரலாற்றினை திருசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் கும்பகோணம் தலத்தைப்பற்றிய (திருக்குடந்தை புராணத்தில்) சுவாமிமலைப் படலத்தில் மலை ஏறுவதற்கான படிகள் 60 என்றும் பிரபவ முதலிய வருஷ தேவர்கள் அப்படிகளாக அமைந்துள்ளனர் என்றும் வழிபாட்டிற்கு வருகிறவர்கள் முதற்படியில் தேங்காய் உடைத்து தீபாராதனை செய்து அவர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு மேல் இரண்டாம் சுற்றுக்கு ஏறவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.
அவை:-

வரும் பிரபவ முதல் வருட தேவர்கள்
திருவளர் அம்மலைச் செறிந்தபல்படி என்றும்
திருவளர் அடிப்படி தெங்கங்காய் தகர்த்து
உருவளர் மலையிவர்ந்து. என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவரே திருவிடைமருதூர் தல புராணத்தில் குறிப்பிடும் பொழுது தென்னுட்டையே ஒரு சிவாலயமாக்கி சிதம்பரம், திருவாவடுதுறை முதலிய ஸ்தலங்களை பரிவாரத் தெய்வங்களின் இருப்பிடமாக்கி அவற்றுள் விதிப்படி முருகன் ஆலயம் அமைய வேண்டிய இடத்தில் திருவேரகமாகிய சுவாமிமலைத் தலம் அமைந்துள்ளது எனக்கூறி தென்முகக் கடவுள் எழுந்தருளிய தலமாக ஆலங்குடி (திருவிரும்பூளை) என்றும் விநாயகர் தலமாய் அமைந்தது திருவலஞ்சுழி என்றும் கூறியுள்ளார்.

"திணி புகழ் ஆலங்குடியில் குருமூர்த்தியானைத்
திருமுகத்தோன் வலஞ்சுழி ஏரகத்திற் செவ்வேள்"

என்றும் அப்புராணத்தில் கூறியுள்ளார்.

12. முதலில் 28 படிகளைத்தாண்டி மேல் தளத்தில் இரண்டாவது சுற்றுத்தொடங்குகிறது. இச்சுற்றின் கிழக்கு பக்கம் முருகன் சிவபெருமானுக்கு பிரணவ உபதேசம் செய்வதுபோன்ற அருமையான சுதையிலான சிற்பத்தைக் காணலாம். கண்கவர் வர்ணம் தீட்டப்பெற்று அருமை யாகத் திகழ்கிறது. சிவபெருமான் மடிமீது இறைவனுகிய சுவாமிநாதனும், இடது பக்கத்தில் அகத்தியர், பிர்மன், வீரபாகுவும் வலப்பத்தில் மகாவிஷ்ணு, நாரதர் முதலியவர் களும் சிவபெருமான் திருவடிப் பக்கத்தில் நந்தியம் பெரு மானும் உள்ளனர்.

13. இரண்டாம் சுற்றின் தென்பக்கம் 32 படிகளை ஏறிச் சென்ருல் தல கணபதி நேத்திர விநாயகர் தரிசனம் தரு வார். விநாயகர் தெற்கு முகமாய் இருந்து அருள்புரிவது இத்தலத்தின் விசேஷமாகும். தங்கமுலாம் பூசப்பட்டுள்ள துஜஸ்தம்பத்தை வணங்கிக்கொண்டு உள்சென்ருல் இந் திரனுல் கொடுக்கப்பட்ட ஐராவதம் என்ற வெள்ளையானை யைத் தரிசிக்கலாம. முருகன் ஆலயங்களில் சுவாமி திருமுன் மயிலே வீற்றிருக்கும். இத்தலத்தில் வெள்ளை யானை வீற்றிருப்பது இத்தலத்தின் வரலாற்று சிறப்பாகும். மேலும் கந்தபுராணத்தில் கூறியுள்ளபடிக்கு முருகனுக்கு யானையும் வாகனமாய் இருந்தது என்பதற்கு ஒருவாறு பொருத்தமாகலாம். உள் சுற்றுக்கு இடதுபுறம் திரும்பினுல் தூணில் கார்த்தவீர்யார்ச்சுனன் என்ற கேகய நாட்டு மன்னன் சிலையையும், அடுத்து கிழக்குப் பார்த்து முருக னின் மெய்காவலராகிய இடும்பனையும் தரிசித்துக்கொண்டு தெற்கு சுற்று வந்து மேற்கே வந்தால் உற்சவ மூர்த்தங் களான வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும். விசா லாக்ஷி விஸ்வநாதர் சன்னதிகளையும், உற்சவமூர்த்தம் சந்திரசேகரர் என்ற (சுப்பிரமண்யமே) சுவாமியும், வட மேற்கு கோடியில் இலட்சுமி சரஸ்வதியும் (மிகஅருமை யான விக்கிரகங்கள்) எழுந்தருளியுள்ளனர்.

14. இங்குள்ள சந்திரசேகரர் சிவபெருமானுடைய 25 மகேஸ்வர வடிவங்களில் ஒன்ருகிய சந்திரசேகரமூர்த்த மல்ல. இவரும் சுப்பிரமணிய சுவாமியே. தெய்வயானை

மட்டும் உள்ளார். திருவிழாக்காலங்களில் 10-வது நாள் தீர்த்தம் தர எழுந்தருளுவர். இவருக்கு சேனுபதி என்ற பெயர்.

15. வடக்குச் சுற்றில் பத்தி மண்டபத்தில் உத்சவ விக்கிரகங்களான மாரியம்மன், பிடாரி ஐயனர், வள்ளி நாயகியார், வேடமூர்த்தி என்ற முருகன், நம்பிராஜன், அவன் மனைவி நங்கை, நாரத முனிவர், விநாயகர், வீரவாகு முதலிய மூர்த்தங்கள் எழுந்தருளியுள்ளனர். வேடமூர்த்தி வள்ளி நம்பிராஜன் நங்கை, நாரதர் முதலியோர் வள்ளி கல்யாண உத்சவத்தில் மட்டும் எழுந்தருளும் மூர்த்திகள். அதனை அடுத்து பளிங்கு கருவறையில் சண்முக சுவாமி வீற்றிருக்கின்றார். அதற்கு கீழ்புரம் பள்ளியறை. அதில் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என தேவியர்கள் இருப்பர். கீழ்புரம் பைரவர், ஸாஸ்தா, சூரியன் முதலிய மூர்த்திகள் வீற்றிருக்கின்றனர். அதற்குநேர் எதிரில் மேற்புறமாய் நவவீராள் அகஸ்தியர், அருணகிரிநாதர், வீற்றிருக்கின்றனர். இவர்களை தரிசித்துக்கொண்டு ஸ்ரீ சுவாமிநாத சுவாமியின் சன்னதி மகாமண்டபம் உள் சென்றுல் கண்ணையும், கருத்தையும் கொள்ளை கொள்ளும் கலியுகவரதன் ஸ்ரீ சுவாமிநாதன் கம்பீரத்தோற்றத்துடன் அருள் ஒளிப்பிழம்பாய் கருணை கொண்ட திருக்கண்களுடன் வலது கையில் தண்டமும், இடது கையை இடுப்பில் அமர்த்தியும் சிரசில் ஊர்த்துவ சிகாமுடியும், மார்பில் பூணல், ருத்ராக்ஷம் முதலியவைகள் விளங்க அருட்ஜோதியாய் ஆதாரமில்லாத உயிர்கட்கு ஆதேயப்பொருளாய் நிமிர்ந்த கோலத்தில் அருள்புரிகிருர். இவ்வழகிய மூர்த்தியை, மெய்ஞ்ஞான தெய்வத்தைக்காண நாலாயிரம் கண் படைத்திலனே. அந்த நான்முகனே என்றே நினைக்கும் மனம், ஆழ்ந்து, அகன்று நுண்ணிய அறிவினை ஆன்மாக்கள் பெற்றுய்ய வேலாயுதத்தினை தன் திருக்கரத்தில் ஏந்தியும் அழகாய் காட்சி அளிப்பது காண்பார் கருத்தை விட்டகலாது. இவரை மனமார தரிசித்து வலது புரம் தாரக ப்ரமேஸ்வரர் சன்னதியும், இடது புரம் சுவாமிநாத சுவாமி திருவுருவம் ( உற்சவ மூர்த்தியும் ) சேவித்துக் கொண்டு மகா மண்டபம் வடக்குப்பக்கம் நோக்கினுல்

தெற்குப்பார்க்க சபாபதி என்ற பெயருடன் நான்கு திருக் கரங்களோடும். ஒரு அம்மையோடும், நான்கு திருக்கரங் களில் இரண்டு நடராஜரைப்போன்று நீட்டிப்பிடிக்கப் பட்டுள்ளன. வலது திருக்கரங்கள் இரண்டும் கீழ்நோக்கி வளைந்து இருக்கின்றன. தெய்வானையம்மையோடு மட்டும் வீற்றிருக்கும் இம்மூர்த்திக்கு சபாபதி (பாகுலேய சுப்பிர மண்யர்) என்று கூறுவர். இவரே மார்கழி திருவாதிரை உத்சவத்தில் திருவெம்பாவையும் வீதியுலாவின்போது ஊடல் உத்சவமும் கொண்டருளுவர். இவை இத்தலத் தின் சிறப்புக்களில் ஒன்றாகும். வடக்குப்பிரகாரத்து சுவரில் ஒரு சிறிய நடராஜர் உருவம் உள்ளது. இவை மூலத்தான நடராஜராக பூஜை முதலியன உள்ளது.

## 16. சுவாமிநாதன் சிறப்பு:-

ஸ்ரீ சுவாமிநாதசுவாமிக்கு சந்தனம், விபூதி அபிஷே கங்களும், விசேஷ தினங்களில் சாத்தப்பெறும் சொர்ண கவசம், சகஸ்ரநாம மாலை, ரத்ன கிரீடம், வைரவேல், வைர சட்கோணம், வைர பதக்கம், வைரதிலகம் சாத்தப் பெற்று தரிசிக்க ஆயிரம் கண்கொண்டு பார்த்தாலும் போதாது.

17. ஸ்ரீ சுவாமிநாதன் எழுந்தருளியுள்ள பீடம் சிவலிங்கத் தின் ஆவுடையார் போன்றும் சுவாமிநாதன் லிங்கத்தின் பாணரூபமாகவும் அமைந்திருப்பது முருகனே சிவபெரு மான். சிவபெருமானே முருகன் என்ற தத்துவத்தை விளக்குவதாய் உள்ளது.

18. பிர்ம்மோத்ஸவ திருவிழாவில் பஞ்சமூர்த்திகளுக்கு இத்தலத்தில் கணபதி பாலசுப்பிரமணியர் ஷண்முக சுவாமி, உத்சவ சுவாமிநாதசுவாமி, சண்டேசர் இவர்களே எழுந்தருளுவது இத்தலத்து சிறப்புகளில் ஒன்று.

## 1. ஸ்தலபுராண நூல்கள்:-

இத்தலபுராணம் மகாபுராணம் என்ற பிர்ம கை வர்த்த புராணத்தில் 16 அத்தியாயத்தில் சுவாமிமலை மகாத்மியம், பஞ்சாட்சர பெருமை, குருநாதன் பெருமை,

தீர்த்தங்களின் பெருமை, சுவாமிநாதன் தரிசனப்பெருமை, கண்கொடுத்த விநாயகர் பெருமை, ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசர் பெருமை முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஷை வட மொழியிலிருந்து, தமிழிலும் சம்ஸ்கிருதத்திலுமாக இவ்வூர் சாம்பமூர்த்தி பாகவதர் அவர்களால் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. சுவாமிநாததாசர் என்பவரால் வசன நடையில் ஒரு தலபுராணமும் வெளிவந்துள்ளது. அதில் தமிழ்ப்புராணச் செய்யுளிலிருந்து எழுதியதாகக் கூறுகிறுர். அத்தமிழ்ப் புராணம் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. அதன்பின் தேவஸ்தானத்தாரால் சுவாமிமலை தலபுராணம் என்ற பெயரில் 1963ல் வெளியிடப்பட்டு ஐந்து பதிப்புகள் வெளிவந்துள்ளது. 6-வது பதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 2. தீர்த்தங்களின் மகிமை:-

இத்தலத்திற்கு 1. வச்சிர தீர்த்தம் (கிணறு) 2. குமார தாரை (காவிரி) 3. சரவண தீர்த்தம் 4. நேத்திர புஷ்கரணி 5. பிர்ம தீர்த்தம் முதலியன பழய புராணங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தீர்த்தமகிமையை இங்கு சுருக்கமாக கொடுக்கப்படுகின்றன.

## 3. வச்சிர தீர்த்தம்:-

இத்தீர்த்தம் கிணராக உள்ளது. இதனை க்ஷேத்திர கூபம், சுவாமி கூபம் என்று புராணம் கூறுகிறது. சிவ பெருமான் திருக்கையில் உள்ள சூலாயுதத்தால் உண்டாக்கப்பட்டதென்பர். ரவிமித்திரன் என்ற அந்தணன் இந்த நீரில் நீராடி பித்ரு கடன்கள் செய்து தன் குலத்தை ஈடேற்றினுன், புஷ்ப வனம் என்ற ஊரில் வசித்த வசு என்பவன் மகப்பேறு கருதி தன் மனைவி காந்திமதியுடன் தீர்த்தயாத்திரை செய்து வந்தான். ஒரு நாள் காட்டில் உள்ள ஓர் குளத்தில் நீராட வசுவானவன் ஆண் வடிவம் மாறி பெண்ணுனுன். மனைவி காந்திமதி மிக வருந்தி இறைவனை வேண்டிக்கொண்டாள். அப்பொழுது நாரதர் இங்கு வந்து சுவாமிமலை சென்று வச்சிர தீர்த்தத்தில் நீராடுக என்றுர். அவ்வாறே வசுவானவன் சுவாமிமலை

வந்து வச்சிர தீர்த்தத்தில் நீராடி மீண்டும் ஆண் உரு வத்தைப்பெற்று மகப்பேற்றையும் அடைந்தான். ஆகவே இத்தீர்த்தம் உடல் நோயைப்போக்கும் சக்தி வாய்ந்தது. மக்கட்பேற்றைத் தரவல்லது.

## 4. குமாரதாரை தீர்த்தம்:-

குமாரதாரை என்ற (காவிரி ஆறு) தெற்கு சன்னதி யில் நேரில் உள்ளது (ஒரு பர்லாங்கில்). கங்காதேவி தன் பாவம் நீங்கத் தாழ்சடைபெருமானை வேண்டி இத்தலத்தில் காவிரியோடு கலந்து எப்பொதும் உறைகின்ருள். மக்கள் தன்மீது கழுவி விடும் பாபத்தை நீக்க குமாரக்கடவுளான சுவாமிநாதன் திருவருளைப் பெற்ருள். குமரனை தரிசிக்க வந்த கங்கை பிரபுவை விட்டு நீங்கப்பிரியமில்லாது. தீர்த்தஉருவமாய் காவிரியில் ஒன்றிப்பெருகினுள். குமரன் தரிசனத்துக்காக தாரையாக (நீர்பெருக்காக) கங்கை காவிரியில் கலந்தபடியால் இங்குள்ள காவிரிக்கு குமார தாரை எனப்பெயர் வழங்கலாயிற்று.

## 5. சரவண தீர்த்தம்:-

இப்பெயர் கொண்டகுளம் கோயிலுக்கு வடகிழக்கு பாகத்தில் உள்ளது. சரவணன் என்ற ஒரு சிறுவன் ஜம தக்கினி முனிவருடைய சாபத்தால் கரடியாய் மாறிய தன் தந்தை மூழ்கி சாபம் நீங்குவதற்காக உண்டாக்கினுன். அச்சிறுவனுடைய தந்தை இத்தீர்த்தத்தில் நீராடி எம் பெருமானுடைய பேரருளால் கரடி உருவம் நீங்கப்பெற்று மனித உருவமெய்தினுன்.

## 6. நேத்திர புஷ்கரணி:-

சுவாமிநாதசுவாமி கோவில் திருமுன் நேர் கிழக்கில் கீழவீதியில் உள்ள குளமாகும். இது ஒரு அழகிய குளம். அண்மையில் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. கந்தப் பெருமானின் திருக்கையில் உள்ள ஞான சக்தியான வேலாயுதத்தினுல் உண்டுபண்ணப்பட்டதென்பர். இதை சுவாமி புஷ்கரணி எனவும் அழைப்பதுண்டு. சுமதி என் பவன் பார்க்கத்தகாத பொருளைபார்க்கக்கூடாது என்ற பெரியோர்களின் ஆணையை மீறினுன். அக்குற்றத்தினுல்

அவன் தன் இரு கண்களையும் இழந்தான். பின் மனம் வருந்தி பரத்துவாஜ முனிவரை வணங்கித் தன் குறையைப் போக்கவேண்டினான். பரத்துவாஜர் இந்த நேத்திர புஷ்கரணியில் நீராடி சுவாமிநாதனைத் தரிசனம் செய்யச் சொன்னார். சுமதியும் அவ்வாறே செய்து இழந்த கண்களை மறுபடியும் பெற்றான். இத்தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை தோறும் தீர்த்தவாரி நடைபெற்று வருகிறது. அது வன்றி சப்தரிஷி வாக்கியம் என்ற சோதிட நூலில் பரிகார காண்டத்து இத்தீர்த்தம் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

## 7. பிர்மதீர்த்தம்:-

இந்த தீர்த்தத்தைப்பற்றிய குறிப்பு பழைய தல புராண நூலில் காணப்படுகிறது. ஒரு சமயம் பிரமன் சிவபெருமானை தரிசிக்கக் கருதி ஹம்ஸவாகனமேறி கைலாயம் வந்தார். அப்பொழுது வாயிலில் நவவீரர்களுடன் இருந்த முருகப்பெருமானைப் பார்த்தும், பார்க்காததுபோல் உள்ளே சென்றார். சிவபெருமான் அருள் பெற்று வெளியில் வரும்பொழுதும் முன்போலவே கவனியாது வெளிச் சென்றார். இந்தச் செயலைக்கண்ட சுப்பிரமணியருக்கு கோபம் ஏற்படவே நவவீரர்களில் ஒருவரான வீரபாகுவை அழைத்து பிர்ம்மனை அழைத்துவரச் செய்தார். பிர்மனைப் பார்த்து வீண் கர்வத்தால் அன்றோ என்னை அலக்ஷியம் செய்து சென்றீர். அப்படியானால் ஓம் என்ற பிரணவத்துக்குப் பொருளை இப்பொழுது சொல்லும் என்றார். பிர்மன் பிரணவத்தின் பொருளை உரைக்க இயலாமல் திகைத்தார். அதனால் பிர்ம்மனை முருகன் சிறையில் இட்டார். படைப்புத்தொழில் நின்றிடவே சிவபெருமான் அதனை அறிந்து குமார சுவாமியிடம் சொல்லி பிர்ம்மனை விடுதலை செய்தார். பிறகு பிரமன் பிரணவத்தின் பொருளை அறிய ஆவல் கொண்டு சுவாமிமலைக்கு வந்து திவ்யமான பிர்ம்ம தீர்த்தம் என்ற ஒரு தடாகத்தை ஏற்படுத்தி கரையிலே ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து அதற்கு பிர்ம்ம லிங்கம் எனப் பெயர்சூட்டி பலநாள் பூசித்து வந்தார். சிவபெருமான் எதிரில் தோன்றி ஸ்ரீ சுவாமிநாதனைப் பூசித்து பிரணவத்தின் பொருளைக்கேட்டுணர்வீராக என்று கூறினார். அவரும்

அவ்விதமே ஸ்ரீ சுவாமிநாதசுவாமியை பூஜித்து வந்தார். சுவாமிநாதனும் பிர்ம்மனுக்கு வள்ளிதேவசேனை சமேதராய் எதிர்தோன்றினர். பிர்ம்மன் குமார குருவை வணங்கி எனக்கு பிரணவத்தின் பொருளை உபதேசிக்க வேண்டும். என்று வேண்டிக்கொண்டார். சுவாமிநாதனும் இத்தலத்தில் பிர்ம்மனுக்கு பிரணவார்த்தங்களை உபதேசித்தார். பிர்ம்மனும் மிக்க சந்தோஷமடைந்து சத்யலோகம் சென்றார். பிர்ம்மனால் பூஜிக்கப்பட்ட லிங்கத்திற்கு பிர்ம்மேசுரர் என்றும், குளத்திற்கு பிர்ம்மதீர்த்தம் என்றும் அன்றையிலிருந்து பெயர்கள் ஏற்பட்டன என்பதாக புராண வரலாறு கூறுகிறது.

## குருவாய் உபதேசம் செய்த வரலாறு

1. நைமிசாரண்யம் என்ற இடத்தில் சூதபுராணிகர் ஏனைய முனிவர்களுக்கு எடுத்துறைத்த சுவாமிமலை தலப் பெருமை என்னும் பகுதியில் ஸ்ரீ நந்தியெம் பெருமான் அகத்திய முனிவருக்கு எடுத்துரைத்த மந்திரோபதேச சருக்கத்திலும், கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணத்திலும் இவ்வுபதேச வரலாறு பேசப்பட்டுள்ளது. அதன் சுருக்கமாவது.

2. ஒரு சமயம் குமாரக்கடவுள் படைத்தல் தொழிலைச் செய்துவரும் பிர்ம்மனிடம் ஓங்காரத்துக்கு பொருள் உரைக்குமாறு வினவினர். பிர்ம்மன் பொருள் தெரியாது திகைத்து நிற்கவே பிரணவப்பொருள் தெரியாத பிர்ம்மன் படைத்தல் தொழிலுக்குத் தகுதியற்றவன் எனக்கருதி தாமே படைத்தல் தொழிலை ஏற்றார். பிர்ம்மனது நான்கு தலைகளிலும் குட்டினர், அவனைச் சிறையிலும் இட்டார். திருமாலும் பிர்ம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க நினைத்து திருக்கைலாய மலைக்குச் சென்று நந்தியெம்பெருமான் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமானிடம் பிர்ம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். நந்தியெம்பெருமான் வாயிலாகச் சிவபெருமான் பிர்ம்மனை விடுவிக்க முருகப்பெருமானுக்குச் சொல்லி அனுப்பினர் முருகன் மறுத்து விட்டார். அது கேட்டு எம்பெருமான் திருநகை புரிந்து இடப வாகனத்தில்

அமர்ந்து திருமால் தேவர்கள் புடைசூழக் கந்தவெற்பை அடைந்தார். பிள்ளையான முருகனிடம் பிர்ம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க ஆக்ஞை இட்டார். தந்தை சொற்கேட்ட தனயன் பக்கத்தில் இருந்த வீரர்களை அனுப்பி பிர்ம்மனைக் கொண்டுவரச்செய்தார். சிவபெருமான் பிர்ம்மனைப் பார்த்து முன்போலவே படைப்புத்தொழிலை நீரே செய்து வருவீராக எனக் கட்டளை இட்டருளினார்.

3. பிறகு சிவபெருமான் தன் மைந்தன் முருகப் பெருமானை அழைத்து தமது மடியில் அமர்த்திக்கொண்டு மைந்தனே வா. நான்முகன் அறியாத பிரணவப்பொருளை எனக்குச் சொல்லுவாயாக என வினவினார். அப்போது முருகக்கடவுள் அண்ணலே பிரணவப்பொருளை இரகசியமாக கூறுவதேயன்றி யாவரும் அறியக் கூறலாகுமோ என்று கூற சிவபெருமான் மைந்தனே தமக்குத் தனிமையிலேயே கூறுக என்று புன்னகையுடன் திருவாய் மலர்ந்து தமது திருச்செவிசாய்த்தார். முருகப்பெருமானும் முழுமுதற் குருவாகிய சிவபெருமானுக்கு குருவாய் பிரணவ மந்திரப்பொருளை உபதேசித்தார். அதுகேட்டு மகிழ்ந்து ஞானநாயகராகிய கைலாசபதி திருவருள் புரிந்து குமாரக் கடவுளை மந்திரோபதேசம் செய்த அத்தலத்திலேயே அருள் பாலித்துக் கொண்டிருக்க திருவருள் புரிந்து இருக்கும்படி ஆக்ஞாபித்து சிவபெருமான் திருக்கைலாயம் சென்றார். இவ்வுண்மை வரலாற்றை இரண்டாம் பிரகாரம் கீழ்பக்கம் உள்ள சுதைவேலை பிம்பங்கள் மூலம் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது.

4. இக்கருத்தினை வலியுறுத்தும் மேற்கோள்களாவன. 'அகமகிழ் வெய்தியங்கண் தண்ணிளங் குமரன் தன்னைத் தலைமையோடு இருப்ப நல்கி" என்றும் "தாரகத்துருவமாம். தலைமையெய்திய ஏரகத்தறுமுகன்" என்றும் கச்சியப்ப சிவாச்சாரியார் திருவாக்கிட்டார். "பொன்னங்கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே" எனக் குமரகுருபரரும் திருவாக்கிட்டார்.

5. முருகன் சுவாமிநாதன் தரிசனத்தினால் ஏற்படும் நன்மைகளை அப்படியே கந்தர் கலிவெண்பா எடுத்துரைக்கிறது.

1. பிறவித்துன்பத்தைப் போக்கவல்லது-சுவாமி நாதன் தரிசனம்.

2. இடையூறுகள், நோய்கள், பில்லிசூன்யம் போன்ற ஏவல் வினைகள், பாம்பு, பிசாசு, கொடிய பூதம் பெரும் தீ, நீர் வெள்ளம், பகைவர்கள் இவைகளினின்றும் காத்து ரக்ஷிப்பது - சுவாமிநாதன் தரிசனம்.

3. தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சுகொண்ட கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும் எவ்விடத்தில் எப்போது வந்து எதிர்த்தாலும், அவ்விடத்தில் அப்போதே தம் அடியார் முன்பு பச்சைமயில் வாகனத்துடன் அருள்கொண்ட அழகிய திருமுகத்துடன் எழுந்தருளி ரக்ஷிப்பது - சுவாமிநாதன் தரிசனம்.

## இத்தலத்தில் முத்தி அடைந்தவர் வரலாறுகள்.

1. முன்னொரு காலத்தில் பிரகதசுவரர் என்ற அந்தணன் ஒருவர் இருந்தார். அவர் அரும் கலைஞுகவும், தூய மனம் படைத்தவராகவும் இருந்தார். இறைவனை அவர் அகக் கண்ணுல் நிஜஸ்வரூபத்துடன் காணவிரும்பித் தவம் செய்தார். பல தலங்களுக்கும் தலயாத்திரை செய்து வந்தார். இவ்வாறு தலயாத்திரை செய்துவரும்பொழுது திருவேரகம் என்ற பதிக்கும் வந்தார். இங்கு வந்தபின் அருள் மாமணியான சுவாமிநாதசுவாமி நேரில் காட்சி தந்தார். பிரகதசுவரர் மிக மகிழ்ந்து இத்தலப் புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்ருனதும் மிக்க பெருமைவாய்ந்ததுமான வச்சிர தீர்த்தக்கரையில் ஒரு மடம் அமைத்துக்கொண்டு தங்கி ஸ்ரீ சுவாமிநாதனை நித்தம் வழிபட்டு வந்தார். ஒரு நாள் பிர்ம்மகத்தி பாபம் சூழ்ந்த வேருெரு அந்தணன் அங்கு வந்து பிரகதசுவரரை வணங்கி தனக்குற்ற பிர்ம்மகத்தி தோஷம் நீங்க வழிகேட்டான். உடனே அந்த தபோதனர் நீ பல பிறவிகளில் செய்த சிவ புண்ணியத்தால் இத்தலம் மேவினுய். அஞ்சாதே நன்மை ஏற்படும் என அவன் மனத்தைத் தேற்றி ஒரு வரலாற்றையும் கூறினுர். அவ்வரலாறு பின்வருமாறு.

2. ஆங்காங்கு ஆடைகளைத்திருடி அவைகளைக் களவுடன் விற்றுப்பிழைக்கும் ஓர் கொடிய அந்தணன். தீச்செயலின் பயனாய் வெண்குட்ட நோயால் பீடிக்கப்பட்டான். ஒரு சமயம் உணவின்றி வருந்தி அலைந்து வாடி இப்புண்ணியத்தலத்தை அடைந்தான். அப்போது இரவு நேரம். ஓர் வீடு அதனுள் யாவரும் அயர்ந்திருந்தனர். உள்ளே புகுந்தான். ஆடை ஆபரணங்களைத் திருடிக் கொண்டிருந்தான். விழித்துக்கொண்ட அவ்வீட்டுக்காரர்கள் அக்கள்ள அந்தணனை அடித்து விரட்டினர். ஓடி வருகையில் இந்த வச்சிர தீர்த்தமாகிய கிணற்றில் விழுந்து விட்டான். இரவு முழுவதும் அக்கிணற்றுக்குள்ளேயே தங்கி இருந்தான். பொழுது விடிந்ததும் ஊர்க்காரர்கள் அவனைக் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர். அவன் உடல் வெண்குட்டம் நீங்கி பொலிவுடன் விளங்கிற்று. அந்த அந்தணனுக்கே வியப்பை அளித்தது. இது இந்த வச்சிர தீர்த்தத்தின் பெருமை என எல்லோரும் உணர்ந்தனர். ஆதலால் நீயும் இந்த தீர்த்தத்தில் மூழ்கி நம் சுவாமிநாதனை வழிப்பட்டால் பிர்ம்மகத்தி தோஷம் நீங்கப் பெறுவாய் என்றும். பிர்ம்மகத்தி தோஷம் கொண்ட அந்த அந்தணன் அவ்வாறே செய்யத் தோஷம் நீங்கித் தூயவனானன்.

## யக்ஞமித்திரன் அருள்பெற்றது.

3. யக்ஞமித்திரன் என்ற ஒருவனும் பன்னிரெண்டு ஆண்டுகள் இத்தலத்தில் இந்த வஜ்ஜிர தீர்த்தத்தின் கரையில் தவம் செய்து இறைவனால் அறிவிக்கப்பெற்று, குமார தாரையெனப் பெயர்கொண்ட காவிரி நீரில் நீராடி நாள் தோறும் சுவாமிநாதனை வழிபட்டுத் தனது மகனது ஊமை என்ற ஊனமும் நீங்கப்பெற்றன். அவனது மகன் நிறைந்த கல்விமானகவும் ஆனன். இவ்வாறு இத்தலத்தில் தங்கி தீர்த்த ஸ்நானங்கள் செய்து ஸ்ரீசுவாமிநாதனை வழிபட்டால் நோய்கள், பாபங்கள் நீங்கப்பெற்று கல்விப்பேறு, மக்கட் பேறு, பொருட்பேறு என்பன போன்ற எல்லா நன்மைகளையும் கையுமெய்யுமாகப் பெற்று இன்புறுவார்கள் என்பது திண்ணம்.

4. சுகப்பிரம்ம ரிஷி இத்தலத்தில் தவம் செய்து முக்தி அடைந்துள்ளதாகவும் பேச்சு வழக்கில் உள்ளது.

## கண்கொடுத்த விநாயகர் வரலாறு.

5. பழய தலபுராணத்தில் 16–வது சருக்கத்தில் விரிவாகக் கூறப்பட்ட கண்கொடுத்த விநாயகர் (நேத்திர விநாயகர்) வரலாற்றுச் சுருக்கம் பின்வருமாறு.

கொங்கு நாட்டில் பிறந்த ஒருவன் பிறவிக்குருடனுக இருந்தான். அவன் சுவாமிமலையை அடைந்து ஒரு நாள் முழுவதும் உணவு அகப்படாமையால் வருந்தி பட்டினி கிடந்து மறுநாள் அதிகாலையில் குமாரதாரை என்னும் காவிரியில் நீராடி கிரிப்பிரதக்ஷணம் செய்து நேத்திர புஷ்கரணியில் மறுபடியும் நீராடி ஆலயம் சென்று மலைமேல் ஏறினுர். விநாயகர் முன் சென்றுர். அருகில் அவனுடன் இருந்து வழிகாட்டி வந்தவர்கள். இது விநாயகர் சன்னிதி என அவனிடம் காட்டினுர்கள். அக்கணமே ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருளால் அவனது கண்கள் குருடு நீங்கப் பெற்று பார்வை பெற்றனன். அன்று முதல் இந்த விநாயகருக்கு நேத்திர விநாயகர் எனவும் கண்கொடுத்த விநாயகர் எனவும் திருப்பெயர்கள் ஏற்பட்டன. இவர் மிகவும் வரப்பிரசாதம் உள்ளவர். இந்த விநாயகர் மேலே துவஜஸ்தம்பத்தின் அருகே வீற்றிருக்கின்றுர்.

## ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசர் வரலாறு

6. கீழ்க்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசரின் வரலாற்றின் பெருமை தலபுராணத்தில் விரிவாகக் கூறுவதன் சுருக்கம்.

மதுரையிலே அரசராயிருந்த மகா சிவபக்தரான வரகுண பாண்டியன் என்பவர் அறியாமையால் செய்த பிர்ம்மகத்தி தோஷம் முதலியன நீங்கச் சோழநாட்டுச் சிவத்தலமான திருவிடைமருதூர் நோக்கி வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் சுவாமிமலைத்தலத்தில் தங்கினுர். இங்கு தங்கும்படி இறைவன் ஆணை ஏற்பட்டது. மதுரை

ஆலவாய் அண்ணல் ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானையும் அருள் கொழிக்கும் அன்னை ஸ்ரீ மீனாக்ஷி அம்மனையும் நாள் தோறும் வழிபடாது உண்பதில்லை, என்ற கொள்கை கொண்ட அம்மன்னன் இந்தத் தலத்தில் அவர்களை ஸ்தாபித்து பூஜை செய்து வழிபட்டார். அதன்பின் திருவிடைமருதூரை அவர் அடைந்தார். அன்றையிலிருந்து அடியார்களுக்கு அருள் தரிசனம் தந்துகொண்டு இவர்கள் இங்கே எழுந்தருளியுள்ளார்கள். இதனால் வரகுண பாண்டியனும் சில திருப்பணிகள் செய்திருக்கக்கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

## இந்திரன் வெள்ளையானை விட்ட வரலாறு.

7. தலபுராணத்தில் ஐந்தாவது சருக்கத்தில் தேவேந்திரன் அருள் பெற்ற வரலாறு மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கமாவது.

ஹரிகேசன் என்னும் கொடிய அரக்கனால் படைவலிவையும், தன் வலிவையும் இழந்த இந்திரன் அசரீரி வாக்கு ஒன்றைக்கேட்டு இறைவன் அருந்துணைபுரிய சுவாமி மலையாகிய இத்தலத்தை அடைந்தான். ஸ்ரீ சுவாமிநாதனை மனமொழி மெய்களால் வழிபட்டு அவன் திருவருளைப் பெற்று முன்போலவே இழந்தவலுவை மீண்டும் பெற்றான். அப்போது அந்த இந்திரன் தன் நினைவுக்காகத் தன் வாகனமாகிய ஐராவதத்தை (அதாவது) வெள்ளையானையை சுவாமிநாதன் திருமுன் நிறுத்திச் சென்றான். அந்த வெள்ளையானை மயில் இருக்கவேண்டிய இடத்தில் சுவாமி முன் இன்றும் இருப்பதைக் காணலாம்.

## பூமிதேவி அருள் பெற்றது.

8. தலபுராணத்தில் தாத்ரிவிருக்ஷம் என்ற தல விருக்ஷமான நெல்லி மரத்தின் பெருமை பத்து பதினோராவது சருக்கங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன் சுருக்கம் வருமாறு.

இத்தலத்தில் நெல்லிமரம் தலவிருக்ஷமாக உள்ளது இந்த மரமானது இன்று கீழ்ச்சுற்றில் தென் கிழக்கில் உள்ளது. பூமிதேவியானவள் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான தீப்பொறிகளைத் தாங்கியபடியால் பார்வதிதேவியால் சபிக்கப்பெற்றாள். விஷ்ணுவின் ஆணைப்படி பூமிதேவி இத்தலத்திற்கு வந்து சுவாமிநாதன் திருவருள் பெற்றுச் சாபம் நீங்கப்பெற்று சுவாமிநாதனை பிரிய மனமின்றி ஒரு நெல்லி விருக்ஷமாக என்றும் இருந்து தரிசித்து வருகிறாள் என்பது பழய நூல்களிலிருந்த புராண வரலாறாகும்.

## மாதவாரி சுவாமிநாத தரிசன பலன்.

ஸ்ரீ நந்தியெம்பெருமான் தலபுராண முடிவில் அகஸ்தியரைப் பார்த்து மாதவாரியாக சுவாமிநாத தரிசனத்தின் பலனைக் கூறுகிறார். ஒருவன் எவ்வளவு பாபங்கள் செய்த போதிலும் குருநாதனை தரிசனம் செய்யப்போகிறேன் எனச் சொன்னாலேயே எல்லாப் பாபங்களும் பறந்துபோகும். பன்னிரண்டு மாத பலன்களையும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

1. ***சித்திரை*** :- சுக்கில பக்ஷம் அஷ்டமி திருவாதிரை இந்த நாளில் ஸ்வாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சுவாமிநாதனை தரிசித்தால் பிர்ம்மஹத்தி பாபங்களும் போகும்.

2. ***வைகாசி*** :- சுக்கில பக்ஷம் அதிதி பரணி நட்சத்திரத்தில் காவிரியான குமாரதாரையில் ஸ்நானம் செய்து சுவாமிநாதனை தரிசித்தால் பசுவைக்கொன்ற தோஷமும் நீங்கும்.

3. ***ஆனி*** :- சுக்கில பக்ஷம் ஸப்தமி திதியில் மனம் குளிர ஸ்வாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் ஸுராபான தோஷம் போகும்.

4. ***ஆடி*** :- பௌர்ணமியிலோ அல்லது அமாவாசையிலோ சுவாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தக்கோர்களுக்கு தானம் செய்து சுவாமிநாதனை தரிசித்தால் தங்கம் திருடிய குறை தீரும்.

5. ***ஆவணி :-*** பூரட்டாதி உத்திரட்டாதி நட்சத்திரங் களுடன் கூடிய ஞாயிற்றுக்கிழமை ஸ்வாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சுவாமிநாதனை வழிபட்டால் மேலான பதவியைப்பெறலாம்.

6. ***புரட்டாசி :-*** அஷ்டமி திதியில் ஸ்வாமி தீர்த்தத் தில் ஸ்நானம் செய்து சுவாமிநாதனை தரிசனம் செய்தால் அன்னவிக்ரய தோஷம் நீங்கும்.

7. ***ஐப்பசி :-*** கிருஷ்ண பக்ஷம் ஞாயிற்றுக்கிழமை இந்த நன்னுளில் ஸ்வாமி தீர்த்த ஸ்நானம் செய்து கிரி பிரதக்ஷணம் செய்து ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை களைச் செய்து அடியார்களுக்கு அன்னமிட்டால் எல்லா பாபங்களும் நீங்கி எல்லா மங்களங்களும் உண்டாகும்.

8. ***கார்த்திகை :-*** கிருத்திகையிலாவது பௌர்ணமி யிலாவது ஸ்வாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பார்வதி குமாரரான சுவாமிநாதனை தரிசித்தால் ஏழு பிறவிகளில் செய்த பாபம் போகும். நற்குடியில் நல்ல செல்வந்தனுகப் பிறப்பான். சுவாமிமலைக்கு அறியாமையால் செல்லாதிருந் தால் இழிகுலத்தில் பிறப்பான்.

9. ***மார்கழி :-*** மிருக சீரிஷம் கூடிய நன்னுளில் ஸ்வாமி தீர்த்த ஸ்நானமும் சுவாமிநாதன் தரிசனமும் அரச குலத்தில் பிறக்கும் வாய்ப்பைத் தரும்.

10. ***தை :-*** பால்குண அத்தத்தில் ஒருபிடி அன்னம் ஏழைகளுக்கு இத்தலத்தில் தந்து சுவாமிநாதன் தரிசனம் செய்தால் சுவாமியின் தேர்த்திருவிழாவை நடத்திவைத்த (தேர்வடத்தை பிடித்து தேரை இழுப்பதும் தேர்த்திரு விழாவை நடத்திவைத்த பயன் உண்டு) அனேக வேள் விகள் செய்த பலனைப் பெறுவார்கள்.

11. ***மாசி :-*** மகா நக்ஷத்திரத்தில் எந்தத் தீர்த்தத்தி லாவது ஸ்நானம் செய்து சுவாமிநாதனை வழிப்பட்டால் சம்சாரக் கட்டிலிருந்து விடுபடுவான்.

12. பங்குனி :- உத்திர நக்ஷத்திரத்தில் மௌனமாக இருந்து சூர்யோதயத்திற்கு முன் ஸ்வாமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சுவாமிநாதனைப் பூஜித்தால் நினைத்த காரியம் நிறைவேறும்.

## புராணத்தைப் படிப்பதால் பயன்.

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவி
சிந்தையில் நினைத்த முற்றியசிவ கதியதனில் சேர்வர்.
அந்தமில் அவுணர் தங்கள் அடல் கெடமுனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோறே.

(கந்தபுராணம் நூற்பயன்)

முற்றும்.

*

## ஸ்ரீ சுவாமிநாதசுவாமி அஷ்டோத்திர சதநாமாவளி

--O--

பழய தலபுராணத்தில்
நந்திகேசுரர் அகஸ்தியருக்கு அருளியதாக உள்ளது.

1 ஓம் ஸ்கந்தாய நம:
பகைவர்களுடைய ஆற்றலைவற்றச்செய்பவன்

2 ,, குகாய நம:
அடியார்கள் இதய குகையில் இருப்பவன்

3 ,, சண்முகாய நம:
ஆறுமுகங்களையுடையவன்

4 ,, பாலநேத்ரசுதாய நம:
நெற்றிக் கண்ணன் புதல்வன்

5 ,, பிரபவே நம:
சகல கிருத்திய வல்லவன்

6 ,, பிங்கலாய நம:
பொன் போலும் நிறத்தான்

7 ,, கிருத்திகாஸூநவே நம:
கார்த்திகை மாதர்களின் குமாரன்

8 ,, சிகிவாகனுய நம:
மயில் வாஹனன்

9 ,, த்விஷட்புஜாய நம:
பன்னிருகைகள் உடையவன்

10 ,, த்விஷண்ணேத்ராய நம:
பன்னிரண்டு கண்களையுடவன்

11 ,, சக்திதராய நம:
வேலைத் தாங்கியவன்

12 ,, பிசிதாசிப்ரபஞ்சநாய நம:
ஊனுண்போராகிய அசுரர்களை அழித்தவன்

13 ,, தாரகாஸுரஸம்காரிணே நம:
தாரகாசுரனை மாய்த்தவன்

14 ,, ரக்ஷோபலவிமர்த்தநாய நம:
ராட்சதர்களின் பலத்தை யடக்கியவன்

15 ,, மத்தாய நம:
புஷ்டியுடையவன்

16 ,, பிரமத்தாய நம:
மிக்க மதம் கொண்டவன்

17 ,, உன்மத்தாய நம:
பித்தன்

18 ,, ஸுரலங்கஸ்யரக்ஷித்ரே நம:
தேவக்கூட்டங்களை காப்பவன்

19 ,, தேவஸேனுபதயே நம:
தேவசேனைக்கு அதிபதி

20 ,, ப்ராக்ஞாய நம:
ஞானம் உடையவன்

21 ,, கிருபாளவே நம:
க்ருபை உள்ளவன்

22 ,, பக்தவஸ்த்லாய நம:
பக்தரிடத்துப் பிரியமுள்ளவன்

23 ,, உமாஸுதாய நம:
உமாதேவியின் குமாரன்

24 ,, சக்திதராய நம:
வலிமையுள்ளவன்

25 ,, குமாராய நம:
இளமையோடு இருப்பவன்

26 ,, க்ரௌஞ்சதாரிணே நம:
க்ரவுஞ்சமலையை தொளைத்தவன்

27 ,, ஸேநாந்யே நம:
சேனைக்கு அதிபதி

28 ,, அக்னிஜன்மனே நம:
அக்னியில் பிறந்தவன்

29 ,, விசாகாய நம:
விசாக நக்ஷத்திரத்தில் தோன்றினவன்

30 ஓம் சங்கராத்மஜாய நம:
சங்கரநிடத்து உதித்தவன்

31 ,, சிவஸ்வாமிநே நம:
சிவபெருமானுக்கு சுவாமி

32 ,, கணஸ்வாமிநே நம:
கணங்களுக்குத் தலைவன்

33 ,, ஸர்வஸ்வாமிநே நம:
சகலருக்கும் கடவுள்

34 ,, ஸநாதநாய நம:
அழிவில்லாதவன்

35 ,, அநந்தஸக்தயே நம:
அளவிடமுடியாத சக்தியையுடையவன்

36 ,, அக்ஷோப்பியாய நம:
துன்பம் இல்லாதவன்

37 ,, பார்வதீப்பிரியநந்தநாய நம:
பார்வதிக்குப் பிரியமான புதல்வன்

38 ,, கங்காஸுதாய நம:
கங்கையின் புத்திரன்

39 ,. ஸரோத்பூதாய நம:
சரவணத்தில் உதித்தவன்

40 ,, பாவகாத்மஜாய நம:
அக்நியில் பிறந்தவன்

41 ,, ஆத்மபுவே நம:
தனக்கு தானே பிறந்தவன்

42 ,, அக்நிகர்ப்பாய நம:
அக்னியைத் தன்னிடத்து வைத்திருப்பவன்

43 ,, சமீகர்ப்பாய நம:
வன்னியில் உண்டானவன்

44 ,, விஸ்வரேதஸே நம:
பரமசிவன் வீர்யத்தில் உண்டானவன்

45 ,, ஸுராரிக்னே நம:
சுரர்பகைவர்களாகிய அசுரர்களை அழித்தவன்

46 ஓம் ஹிரண்யவர்ணாய நம:
பொன்னிற மேனியன்

47 ,, சுபக்ருதே நம:
மங்களத்தைச் செய்கிறவர்

48 ,, வஸுமதே நம:
வசுக்களின் ஸ்வரூபன்

49 ,, வடுவேஷத்ருதே நம:
ப்ரம்மாசாரி வேடம்தாங்கியவன்

50 ,, ஜ்ரும்பாய நம:
தனக்குத்தான் ஒப்பானவன்

51 ,, பிரஜ்ரும்பாய நம:
விசேஷமான மலர்ச்சியை உடையவன்

52 ,, உஜ்ரும்பாய நம:
மிகுந்த மிடுக்கு உடையவன்

53 ,, கமலாஸன ஸன்னுதாய நம:
பிரும்மாவால் துதிக்கப்படுபவன்

54 ,, ஏகவர்ணாய நம:
ஓரெழுத்தானவன்

55 ,, த்விவர்ணாய நம:
இரண்டெழுத்தானவன்

56 ,, த்ரிவர்ணாய நம:
மூன்றெழுத்தானவன்

57 ,, சதுர்வர்ணாய நம:
நான்கு எழுத்தானவன்

58 ,, பஞ்சவர்ணாய நம:
ஐந்தெழுத்தானவன்

59 ,, ப்ரஜாபதயே நம:
ப்ரம்மாவாக இருப்பவன்

60 ,, பூஷ்ணே நம:
சூரியனாக உலகிற்கு ஒளிதருபவன்

61 ,, கபஸ்தினே நம:
ஒளிமயன்

62 ஓம் கணநாய நம:
கணங்களுக்கு தலைவன்

63 ,, சந்திரவர்ணாய நம:
சந்திரனைப்போல வண்ணமும்
குளிர்ச்சியும் உள்ளவன்

64 ,, கலாதராய நம:
பிறையைச் சூடினவன்

65 ,, மாயாதராய நம:
மாயையைத் தரித்தவன்

66 ,, மகாமாயினே நம:
பெரியமாயையை உடையவன்

67 ,, கைவல்யாய நம:
மோட்ச உலகுள்ளவன்

68 ,, ஸகலாத்மகாய நம:
சகல உயிர்களிடத்தும் உள்ளவன்

69 ,, விஸ்வயோனயே நம:
ஜெகத்காரணன்

70 ,, அமேயாத்மனே நம:
அளவிடற்கரிய மகிமை உடையவன்

71 ,, தேஜோநிதயே நம:
ஒளிக்கு இருப்பிடமானவன்

72 ,, அநாமயாய நம:
பிணி அற்றவன

73 ,, பரமேஷ்டினே நம:
உத்தமபதவியில் இருப்பவன்

74 ,, குரவே நம:
குருமூர்த்தியானவன்

75 ,, ப்ரம்மணே நம:
பரப்ரம்மமானவன்

76 ,, வேதகர்ப்பாய நம:
வேதத்தின் உட்பொருளாய் இருப்பவன்

77 ,, விராட்வபுஷே நம:
பருத்த தேகமுடையவர்

78 ஓம் புளிந்த கன்யாபர்த்ரே நம:
குறமகள் நாயகன்

79 ,, மகாஸார ஸ்வதப்ராதாய நம:
வேதாந்தப் பொருளானவன்

80 ,, ஆஸ்ரிதா கிலதாத்ரே நம:
அடைந்தவர்கட்கு எல்லாம் தருபவன்

81 ,, சோரக்நாய நம:
திருடரை அழிப்பவன்

82 ,, ரோகநாசநாய நம:
பிணிகளை அழிப்பவன்

83 ,, அனந்தமூர்த்தயே நம:
முடிவில்லாத உருவங்களையுடையவன்

84 ,, ஆனந்தாய நம:
ஆனந்தமயன்

85 ,, சிகண்டிக்ருதகேதநாய நம:
மயிலைக்கொடியாகக் கொண்டவன்

86 ,, டம்பாய நம:
ஆடம்பரம் உள்ளவன்

87 ,, பரமடம்பாய நம:
மேலான ஆடம்பரம் உள்ளவன்

88 ,, மஹாடம்பாய நம:
மிகுந்த ஆடம்பரம் உள்ளவன்

89 ,, வ்ருஷாகவயே நம:
அளவிடக்கூடாத ஸ்ரூபம் உள்ளவர்

90 ,, காரணோபாத்ததேஹாய நம:
காரணார்த்தமாக தேகம் எடுத்தவன்

91 ,, காரணாதீதவிக்ரஹாய நம;
காரணத்திற்கு அப்பாற்பட்ட உருவுடையவன்

92 ,, அநீஸ்வராய நம:
தனக்குமேல் கடவுள் இல்லாதவன்

93 ,, அம்ருதாய நம:
இறப்பற்றவன்

94 ,, ப்ராணாய நம:
பிராணனாக இருப்பவன்

95 ,, ப்ராணாதாராய நம:
ஜீவனை நிருத்திவைக்கிரவர் (ஜிவனுக்கு
ஆதாரமானவர்)

96 ,, பராவராய நம:
உத்தமோத்தவர்

97 ,, வ்ருத்தகந்தரே நம:
விரோதிகளைக் கொன்றவன்

98 ,, வீரக்னாய நம:
எதிரி வீரர்களைக் கொன்றவன்

99 ,, ரக்தாய நம:
(சிகப்பு) குங்குமப்பூ நிரமுள்ளவர்

100 ,, ஶ்யாமாய நம:
கருப்பு பச்சை நிரமுள்ளவன்

101 ,, ஸுபிங்களாய நம:
அதிமதுரமானவர்

102 ,, பஹுவர்ணாய நம:
அநேக வர்ணமுள்ளவர்

103 ,, கோபதயே நம:
பூமிக்கு பதியானவன்

104 ,, தாக்ஷிணாத்யவரப்ரதாய நம:
பக்தாளுக்கு வரம் கொடுப்பவர்

105 ,, ஸர்வேஸ்வராய நம:
சகலத்திற்கு ஈஸ்வரராய் உள்ளவன்

106 ,, லோககுரவே நம:
உலகிற்கு குருவானவன்

107 ,, அஸுராநீகமர்த்தநாய நம:
அஸுரக்கூட்டங்களை ஸம்ஹாரம் செய்கிரவர்

108 ,, ஸ்வாமிநாதாய நம:
தந்தைக்கு உபதேசித்தவன்

—○—

## அருணகிரிநாதர் வரலாறு.

*ஐயா அருணகிரி அப்பா உனைப்போல*
*மெய்யாக ஓர் சொல்லினம் பினர்யார் வையகத்தோர்*
*சாற்றரிதென்றே சற்றூர் தன்னையாய் முக்கண் எந்தை*
*நாற்றிசைக்கும் கைகாட்டினன்.*
*வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்*
*தாக்கிற் திருஞானசம்பந்தர் – நோக்கிற்கு*
*நற்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார்*
*சொற்குறுதிக்கு அப்பர் எனச் சொல்.*

முருகன் அடியார்களான நக்கீரர் குமர குருபரர் கச்சியப்ப சிவாச்சாரியர் முதலிய அரும்பெரும் பக்தர்களின் வரிசையில் அருணகிரிநாதரும் ஒருவராம். பஞ்சபூதத்தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை என்ற புண்ணியப்பதியில் 15ம் நூற்றாண்டில் பிரபுடதேவமன்னன் காலத்தில் ஆறுமுகப்பெருமான் திருவருளால் முத்தம்மை என்ற அம்மையாருக்கு தி ரு ம க னா ய் அவதரித்தார். அருணகிரிநாதர், இவருக்கு ஆதியம்மை என்ற தமக்கையும் உ ண் டு. இவருடைய இளம் வயதில் தாயார் முருகன் திருவடியை அடைந்தார். சிறுவயதில் சிற்றின்பப்பற்றில் மி க வு ம் ஊன்றிய இவர் கடைசியில் பிணியுற்று ஒரு நாள் வல்லாள ராஜகோபுரத் (திருவண்ணாமலை கிழக்கு கோபுரம்) தினின்றும் கீழே விழ முருகன் தோன்றி காட்சி தந்து சும்மா இரு என்ற மந்திர உபதேசம் செய்தார். சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே எனக் கந்தர் அனுபூதியில்வரும் சொற்றொடரும் இதற்குச்சான்றாகும். முருகப்பெருமான் மயில் மீதுதோன்றி முத்தைத்தரு என்று அடி எடுத்துக்கொடுக்க அருணகிரிநாதர் அருள் வாக்குப் பெற்று திருப்புகழ் பாடத்தொடங்கினார். முருகனுடைய புகழ் அமைந்த பாடலாதலால் திருப்புகழ் எனக் காரண இடுகுறிப்பெயராயிற்று. முருகன் எழுந்தருளியிருக்கும் அறுபடை வீடுகளுக்கும் மற்றத்தலங்கட்கும் சென்று திருப்புகழ் பாடிபரவினார். இவர் பாடிய தி ரு ப் பு க ழ் பதினாறாயிரம் என்பர். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையும், அருணகிரியார் பாடியதிருப்புகழ் பாடல்களும் முருகனுக்குத்தேனாய் பாலாய் சுவைக்க இருக்கின்றன.

நக்கீர முனி சொன்ன திருமுருகாறெனும் தேறலும். எம் அருணகிரிநாதர் ஓதுபதினாறாயிரம் திருப்புகழ் அமுதமும் என மார்க்க சகாயத்தேவரும் கூறியுள்ளார். முடிவில் கிளி உருவம் பெற்று முருகன் திருக்கையில் அமர்ந்தார். இவருடைய திரு நக்ஷத்திரம் ஆனி மூலம்.

## நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை.

4-வது படைவீடு (திருவேரகம்) சுவாமிமலை.

இரு மூன்று எய்திய இயல் பினின் வழா அ(து),
இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடி,
அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு,
ஆறினில் கழிப்பிய அறன் நவில் கொள்கை,
மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல,
ஒன்பதுகொண்ட மூன்று புரிநுண்ஞாண்,
புலராக்காழகம் புலர உடீஇ,
உச்சிக்கூப்பிய கையினர் தற்புகழ்ந்து,
ஆறெழுத்து அடக்கிய அருமறைக்கேள்வி,
நாவியல் மருங்கில் நவிலப்பாடி,
விறையுறு நறுமலர் ஏந்திப்பெரிது உவந்து,
ஏரகத்து உறைதலும் உரியன் அதா அன்று,

## சுவாமிநாதன் துதி

(தல புராணம்)

பூமாது புணர் மாலும் போற்றரிய
மூவிலை வேற்புனிதன் கேட்ப
ஓமாதி மந்திரத்தின் உண்மை யெலா
முணர்ந்து முறை உரைத்துக்காட்டி
ஆமாதியந்தமிலா யைந்தொழிலுங்
கடவியப்பாலறி யானிற்கும்
கோமானையேரகத்திலுறை சுவாமி
நாயகனைக் குறித்து வாழ்வாம்.

## வரகவி. சுப்பிரமணிய பாரதி

சென்னியாறுந்தணிந்த சிவபரஞ்சுடற்கு வேதஞ்
சொன்ன ஆசிரியன் என்று தொல்லுலகனைத்தும் போற்ற
பொன்னிசூழ் ஏரகத்துப் பொருப்பினிற்கோயில் கொண்ட
பன்னிருகையன் வேலைப்பணிவதே எமக்கு வேலை.

# ஸ்ரீ சுவாமிநாதசுவாமி துதிப்பாடல்கள்

## அருணகிரிநாதர் திருப்புகழ்.

1. பாதிமதி நதிபோது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுற அருள்
மாயனரி திரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதிஅயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினில் ஏறி அமரர்கள்
சூழவலவரு மிளையோனே
சூதமிகவளர் சோலை மருவு
சுவாமிமலை தனி லுறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

2. செகமாயையுற் றனகவாழ்வில் வைத்த
திருமாது கற்பம் உடலூறித்
தெசமாதமுற்றி வடிவாய் நிலத்தில்
திறமாய் அளித்த பொருளாகி
மகவாவினுச்சி விழியானனத்தில்
மலைநேர்புயத்தி லுறவாடி

மடிமீதடுத்து விளையாடி நித்த
மணிவாயின்முத்தி தரவேணும்
முகமாயமிட்ட குறமாதினுக்கு
முலைமேலணைக்க வருநீதா
முதுமாமறைக்கு ளொரு மாபொருட்குன்
மொழியே யுரைத்த குருநாதா
தகையாதெனக் குனடிகாண வைத்த
தனியேரகத்தின் முருகோனே
தருகாவிரிக்கு வடபாரிசத்தில்
சமர் வேலெடுத்த பெருமாளே.

## நவரத்னமாலை.

3. ஒருதரம் சரவணபவா என்று சொல்பவர்
உளத்தினின் நினைத்தவெல்லா
முடனேகைகூடுமென வேதங்கள் மொழியுதே
உண்மை அறிவான பொருளே
பரிவாகவே அநந்தந்தரஞ் சரவண
பவா வென்று நான் சொல்லியும்
பாங்கு மிகு காங்கேயா அடியனேன் எண்ணியது
பலியாதிருப்பது ஏனோ
குருபரா முருகையா கந்தா கடம்பா சொல்
குமரா குகா சண்முகா
கோலாகலா வெற்றிவேலா எனக்கருள்
கொடுத்தாள் வை முத்தையனே
மருமலர்க்குழலழக தேவகுஞ்சரி வள்ளி
மணவனே என் துணைவனே
வன்னமயில் வாகனு பொன்னேரகப்பதியில்
வளர்சாமிநாதகுருவே.

4. கந்தா குழந்தைவடிவேலா குகா சண்முகா
பரமகுருதேசிகா
கனம்பெற உனக்கே ஜெயம் தருவம் நீ உன்
கருத்திற்பயப்படேல் என்று
எந்தாய வேளையிலும் அசரீரி மொழியாலும்
எண்ணில் சகுனங்களாலும்

இயம்பு முன் உத்திரவு பொய்க்குமோ உனை நம்பி
என் மனம் மயங்கலாமோ
சிந்தா குலந்தவிர்த்து இந்தா எனக்கருணை
செய்து என் அபீஷ்டம் யாவும்
சித்திக்கவே அருள் செய்பக்தர்க்கு இரங்கும் என்
தெய்வமே உனை நம்பினேன்.
மந்தாகினிக்கு இனிய மைந்தர் முகுந்தற்கு
மருகா சிறந்த முருகா
வன்னமயில் வாகனு பொன் னேரகப்பதியில்
வளர் சாமிநாதகுருவே.

## துதிமஞ்சரி

5. திருமணி விளங்கும் கிரீட மணிவானவர்
தினந் துதி செய் சிந்தாமணி
செப்பரு மனோன்மணி விருப்பொடுஞ் செம்மணி
செழுஞ்சூடகக்கரத்தேந்து
ஒருமணி வளம் பெருஞ் சைவமணி மான்பா
லுதித்த பெண்மணி வள்ளியாம்
ஒண்மணி வயங்கத் தினைப்புனத்தே வந்
துலாவு மணி கடலுண் மணி
குருமணி யெனச் சொலுஞ் சுப்பிரமணியப் பெருங்
குணமணி யெனிரு கண்மணி
கோதிலாத் தெய்வமணி யருணகிரிநாதர் வாக்
குக்குள மகிழ்ந்து கதியுந்
தருமணியு நீயாதலா லடியென் மனவிருள்
தவிர்த்து நல்வாழ்வு தருவாய்
தாமநிலை யேழ்மருவு மாடமலி நீடெழில் கொள்
சாமிமலைவாழ் முருகனே.

## திருவேரக சதகம்.

6. கண்டிகதிர் காமம் திருச்செந்தூர் பரங்கிரி
காசினியில் புகழ்படைத்த
கனமான திருவாவினன்குடி திருத்தணி
கனங்கொண்ட எட்டுகுடியாம்

மண்டியே கோடான கோடி ஜனம் சூழ்கின்ற
தில்லையாம் அருணகிரி சிக்கல்வேளூர்
மகிதலந்தன்னிலே பெருமைசேர் ஏரகம்
இவ்வுலகில் மதிக்கமுடியாத் தலங்கள்
தெண்டி சாமுண்டி மகாதேவி சங்கரி
திரிபுரை ஈன்றபாலன் செகமதில்
புகழ்பெற்ற முருகன் கார்த்திகேயன் தலங்களின்
பெருமையை செப்பவும் முடியாது காண்
தண்டிக்க வேலாயுதங்கொண்ட மூர்த்தியே
தமியேனை ஆதரிப்பாய்
சதுர்மறைகள் புகழ்கின்ற ஏரகந்தன்னில் வாழ்
சாமிநாதக்கடவுளே.

## சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ்,

(பதிப்புக்குவராத பிள்ளைத்தமிழ்.)

7. முன்பெலாமுனைப்பணிந்து மாதவம்
பலமுயன்றிடு மயிலேறு முன்னி
நின்னையேதுதித்திட நீயவன்
முறைமையை யறிந்தேநல்
இன்ப மாம்படி யாங்கவன் கருத்தினில்
எண்ணிய குறையெல்லாம்
இயல்பினுல் முடித்தருளிணையப்படி
எங்கறுக்கவன் போல்
நின்பராபர மலரடி வணங்கிலோம்
நித்தலும் யாங்களும் துதித்தேத்தோம்
நீறுபூசவுமறிகிலோ உன்னையே
நினைந்திட மாட்டேமுன்
அன்பிலா லெமக்கெப்படி யாகிலுமாகுக
மாடுக செங்கீரை
ஆரமார் பொழிலேரக முருகனோடு
ஆடுக செங்கீரை

## கோவை நடேசக்கவுண்டர் அவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ்

8. எப்பாடைகற்றவரும் எத்தேயம் உற்றவரும்
எக்கோலம் இட்டவருமே
இச்சாவழிச்சுழலல் அற்றே தவத்தின் வழி
நிற்பார் தமக்கு அருள்பவா
மைப்பானல் ஒத்தொளிர் மிடற்றூர்களிக்கும் அரு
மைப்போதனைக்குருபரா
வற்றுமுழுக்கருணை வைத்தாள் உமைக்கு விழி
யைப்போலும் நற்புதல்வனே
கைப்போதகத் தமையர் பிற்பாடு உதித்த ஒளிர்
கட்டாணி முத்து முருகா
கைக்கு ஆழிநத்து கதை வில்கூர் அகிப்படை
தரித்தார் உவக்கும் மருகா
தப்பேதும் அற்றவர் உளக்கோயில் உற்றகுக
சப்பாணி கொட்டியருளே
தற்போதம் அற்றவர் வழுத்து ஏரகக்குமர
சப்பாணி கொட்டியருளே.

## திருவேரகத்தந்தாதி.

9. மாலையனந்தயுகம் போல வெண்ணி மயங்கு மிவன்
மாலையனந்தனைநேர் நடையீர் சொலும் வந்துபது
மாலையனந்த வயிராவதன் றெழும் வண்கடப்ப
மாலையனந்தமிகுமேரகத்துறை வானவற்கே.

10. படிகடந்தான்றிருவேரகனுமம்பல்காலு நெஞ்சே
படிகடந்தானிலையென்னனுன்கு பதங்களெனும்
படிகடந்தானந்த முத்தியைச்சேர்வை மெய்ப்பத்திதனிற்
படிகடந்தானமெனவிருந்தாலென்பயன் தருமே.

## சுவாமிநாதசுவாமியின் ஸ்லோகம்.

ஊருஹஸ்தம் தண்டபாணிம் மௌஞ்ஜீ கௌபீன தாரிணம்
சுக்ல யக்ஞோப வீதாந்த பத்தக் கிருஷ்ணுஜினம் வரம்
ஸிந்தூ ராருண வர்ணஞ்ச ஸதா பத்த சிகோஜ்வலம்
பக்தாபீஷ்ட ப்ரதம் வந்தே ஸ்வாமிநாதம் சிவாத்மஜம்.

## சுவாமிநாதன் தியான சுலோகங்கள்

## (பஞ்சரத்ன ஸ்லோகம்)

ஹே ஸ்வாமி நாதார்த்த பந்தோ
பஸ்மலிப்தாங்க காங்கேய காருண்ய சிந்தோ
(ஹேஸ்வாமி)

1. ருத்ராக்ஷதாரிந் நமஸ்தே — ரௌத்ரரோகம் ஹரத்வம்
புராரேர்குரோமே
ராகேந்து வக்த்ரம் பவந்தம் மாரரூபம் குமாரம்பஜே
காமரூபம் (ஹேஸ்வாமி)

2. மாம் பாஹி ரோகாதகோராத் — மங்களாபாங்க
பாதேன பங்கா ஸுராணும்
காலாச்சதுஷ்பாப கூலாத் — காலகாலஸ்ய ஸூநும்
பஜே க்ராந்தஸாநும் (ஹேஸ்வாமி)

3. ப்ரம்ஹாதயோ யஸ்யசிஷ்யா — ப்ரம்ஹபுத்ராகிரௌ
யஸ்ய ஸோபா நபூதா
யஸ்ய ஸைந்யம் ஸுராஸ்சாபி ஸர்வே — ஸாமவேதாதி
கேயம் பஜேகார்த்திகேயம் (ஹேஸ்வாமி)

4. காஷாய ஸம்வீதகாத்ரம் — காமரோகாதிஸம்ஹாரி
பிக்ஷாந்நபாத்ரம்
காருண்ய ஸம்பூர்ண நேத்ரம் — சக்தி ஹஸ்தம்
பவித்ரம் பஜே சம்புபுத்ரம் (ஹேஸ்வாமி)

5. ஸ்ரீஸ்வாமி சைலே வஸந்தம்—ஸாது ஸங்கஸ்தரோகாந்
ஸதாஸம் ஹரந்தம்
ஓம் காரதத்வம் வதந்தம் — சம்புகர்ணே ஹஸந்தம்
பஜேZஹம் சிசும்தம் (ஹேஸ்வாமி)

ஆறிருதடந்தோள் வாழ்க அறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்ககுக்குடம் வாழ்கச்சேவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன்னணங்குவாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்க சீரடியரெல்லாம்

**ஸ்ரீ சுவாமிநாதன் திருவடி வாழ்க.**

**வேலும் மயிலுந் துணை.**

# SWAMIMALAI
## SHORT HISTORY.

Swamimalai is a small town situated on the north bank of the Cauvery river, and the river is otherwise called in Stalapuranam as Kumaradharai. There is a bus-route between Kumbakonam and Thanjavur in the Madras Trunk road which cuts the Swamimalai Station and the hill-temple at Thiruvalanchuzhi. The hill temple is situated one mile away to the south of Swamimalai Railway Station and five miles away to the west of the city of Kumbakonam. A good number of devotees from all corners gather daily for Darsan. Hence every day seems to be a festival day. The people who are on pilgrimage have all sorts of vehicular conveniences. There are rest-houses for pilgrims administered by the Devasthanam. The two rivers by name Cauvery and Arasalaru flow around embracing the sacred place. The people with an æsthetic bent will definitely become enamoured of the vignette of the surroundings scenery.

This holy place has got many sacred names such as Swamimalai, Gurumalai, Dhathrigiri, Thiruveragam etc.. The name Eragam is celebrated in the old Tamil Sangam Literature Among the six important places (Padaiveedugal) where Lord Muruga is presiding under different names, Swamimalai, which is other-wise known as Thiruveragam, is the fourth house where Lord Siva, the father of Subramaniya is said to have been taken as a desciple of Lord Muruga, his son, while expounding the meaning of Pranavamantram. This old episode stands as the cause for the name

Swamimalai. This very name is given to this town by Lord Siva himself. Swaminathaswami is known by the purely Tamil miracle-name Murugan which it is said it cannot be translated easily. The "Tender Child" is represented in legend staturary and painting as beautiful child or youth the God Muruga, who in gracious pity or humanity, takes forms, sometimes as the youthful God of wisdom and the God also of war when wicked Titans (Asuras) have to be destroyed. and sometimes as the holy Muruga, type of perennial, tender beauty, always and every where at the service of his devotees.

The temple is built on an artificial hill about sixty feet above the ground level. This is an ancient temple consisting of three Prakarams - ie., rounds. It is believed that this majestic hill-temple is to have been founded by the famous King Karthaveeriya and the statue of the said king has been cut in stone and attached to a stone pillar in the upper part of the temple. The main temple is an old architecture and the rest are recent renovations. Before the sanctum Sanctorum there is a stone elephant instead of peacock. This is an uncommon feature and its significance rests on an old episode. Saint Arunagiri Nathar has sung in praise of the presiding deity. The hill temple is connected with flight of steps sixty in number and it is said that the said steps represent the Hindu Cycle of sixty years and each step represents one Tamil Year. After ascending 20 steps from the ground floor a beautiful "Sudai Work" of lime mortar and Clay, coated with cement and painted, depicting the Upadesam by Lord Subramania to Lord Siva, expounding the meaning of "Pranava Manthram" "OM" will be seen just to the east of the main sannadhi.

Being one' of the Prathana temples in South India, thousands of worshippers from all over Tamil Nad and other places pour in during monthly Karthigais and have dharsan of Lord Swaminatha.

On the ground floor, there are temples dedicated to Lord Sundaresa and Goddess Meenakshi and the same have been founded by Varaguna Pandiya Thevar, the King of Madurai. It is said that when Varaguna Pandiya Thevar was proceeding to Thiruvidaimarudur in order to wash off a sin of murder unknowingly committed by him, he happened to stay in this holy place. He had a principle not to take food without worshiping Lord Sundaresa. He thereupon installed in this temple Lord Sundaresa and Goddess Meenakshi and performed Poojas. In the hill temple just by the side of Dwajasthambam there is Lord Vigneswarar known as Nethra Vinayakar. It is said that a certain born blind man from Quilon fasted a whole day and after taking bath in the Holy river Cauvery locally called Kumara Tharai and Nethra Pushkarani, a holy tank in East Street in front of Sri Swaminathaswami Sannadhi, happened to go over to this temple with the help of some passers-by. When he reached Nethra Vinayakar Sannadhi, he suddenly gained his sight and from that time onwards this Vinayakar is known as Eye Giver or Nethra Vinayakar.

## Thirthams

It has four Thirthams in it namely, Vajrathirtham, Kumara Tharai, Saravana Thirtham and Nethra Pushkarani. Each Thirtham has a sanctity of its own.

## Daily Poojas

Six Kalams of Poojas, three in the forenoon commencing from 6 A. M. to 12 Noon and three in the afternoon, commencing from 5 P. M. to 9-30 P. M.

are conducted in the temple z, (i) Ushakalam, (ii) Kalasandhi (iii) Uchikalam (iv) Sayarakshai (v)- 2nd Sayarakshai and (vi) Arthajamam.

## FESTIVALS

A part from the monthly Karthigai festivals the important other festivals are:—

1. Pushyam Festival in the month of January.
2. Chitrai and Valli Kalyana Festivals in April.
3. Pavithra Utsvam in September.
4. Skandha Sashti Festival in October.
5. Thiru Karthigai Festival in November.

During Valli Kalyana Festivals the presiding deity decorated as hunter will be taken to Sri Swatha Vinayakar Temple at Tiruvalanchuli (situated one mile south of Swamimalai) and there Goddess Valli is taken as captive and brought to Swamimalai Temple where wedding is permed to Lord Shanmuga with Sri Valli Nayaki.

## AGHIEVEMENTS OF WORSHIP

Being Pararthana Temple, worshippers go over to this temple with the firm belief that they wonld be blessed with all worldly fortunes and happiness. By performing marriages in the Temple they would be blessed with bright and pious children.

About 1000 marriages are being celebrated in the temple premises in a year and the fee collected per marriage is Rs. 25/- and necessary Muhoortha articles for the marriages are supplied by the temple. A beautiful Kalyana Mandapam has been constructed at a huge cost of about Rs. 60,000/- for the performance of marriages and a Rest House with all conveniences attached thereto and each room in it is rented out at Rs. 2/- per day of 24 hours on ordinary days.

## SUB TEMPLES

River Side Vinayagar and Sri Kasi Viswanathaswami Temples at Swamimalai and the Historically famous temple known as *Sri Swetha Vinayakar Temple with Lord Sadai Mudi Nather and Goddess Periyanayaki* (sung in praise of by the Holy saints Thirunavukkarasar and Thirugnanasambandar) at Thiruvalanchuli are sub temples of this Devasthanam.

## PROPERTIES AND INCOME

This Devasthanam owns Acre 132 cents 61 of wet lands and Acre 303 cents 28-1/2 of dry lands. The main source of income is from the Archana fees and Hundials (Kanikkais). The Average income of the Devasthanam is about Rs. ***Three Lakhs.*** (300000)

## MANAGEMENT

Sri Swaminathaswami Devasthanam, Swamimalai is a First Grade Institution administered by a Board of Trustees consisting of five in number through an Executive Officer appointed by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

## RENOVATION

The cement flooring of third prakaram, construction of an Arch, Shaving Shed, Vessels room and other Thiruppani works are all to be done. The cost of all these is estimated to cost more than a lakh of rupees. The last Kumbabishekam was performed in the year 1948. The Mahakumbabishekam will have to be performed soon.

Offerings to the temple should all be made direct to the temple authorities and receipts obtained from its office or may be placed inside the Hundials kept at the Sannadhis.

ARCHANAI FEES AND CHARGES FOR SPECIAL DECORATIONS OF DEITY ETC.

| S. No. | Particulars. | Rs. nP. |
|---|---|---|
| 1. | Astotharam | 0—30 |
| 2. | Sahasranamam. | 1—50 |
| 3. | Abishegam Rate per Rs. Value | 0—40 |
| 4. | Kavadi | 1—50 |
| 5. | Marriage | 25—00 |
| 6. | Ear Boring | 2—00 |
| 7. | Thiruvabarnam | 2—00 |
| 8. | Kavacham | 25—00 |
| 9. | Sahasranama Malai | 10—00 |
| 10. | Anghi | 4—00 |
| 11. | Velayutham | 4—00 |
| 12. | Kreedam with stones | 8—00 |
| 13. | Mudi | 0—75 |
| 14. | Dining Hall per day (including vessels) | 30—00 |
| 15. | Room Rent per day | 2—00 |
| 16. | Kalyana Mandapam Rent per Marriage | 5—00 |

**BOARD OF TRUSTEES**

Sri T. S. Swaminatha Odayar, M. L. A.
Managing Trustee.

Sri T. V. Subramania Iyer. Trustee

Sri V. S. T. Thirumalaivelu Pillai. ,,

Sri R. Subramanian, B. A. ,,

Sri S. S. Ramaswami Odayar, ,,

Sri S. Somasundaram, B.A. B.L., Executive Officer.
Sri Swaminathaswami Devasthanam
Swamimalai.



திரு S. சோமசுந்தரம, B. A., B. L.

நிர்வாக அதிகாரி.



திரு T. S. சுவாமிநாத உடையார், M. L. A.

தர்மகர்த்தாக் குழுத் தலைவர்.



திரு T. V. சுப்பிரமணிய அய்யர்,
தர்மகர்த்தா.

திரு S. S. ராமசாமி உடையார்
தர்மகர்த்தா.



திரு R. சுப்பிரமணியம், B. A.,
தர்மகர்த்தா

திரு V. S. T. திருமலைவேலு பிள்ளை
தர்மகர்த்தா

தேவசேனை திருக்கல்யாணம்

உ

சிவமயம்

# திருவலஞ்சுழி தலவரலாற்றுச் சுருக்கம்

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி தேவஸ்தான வெளியீடு

(1967)

# SRI SWETHA VINAYAKAR TEMPLE,

## THIRUVALANCHULI.

Not far away from the temple of Swaminatha, there is another famous shrine dedicated to the God Vinayaka on the sacred spot known as "*Thiruvalanchuli*". It is said because of the sanctity of this place, the river Cauvery changed its natural course to the right hand side and hence this place has assumed this name.

According to Hindu scripts and customs, God Vinayakar should be worshipped before commencing any good work. But when the ocean was churned by the Devas and Asuras to get nectar so as to make themselves immortal, in their haste they overlooked this worship and as a consequence they got deadly poison instead of nectar. They created an image of Vinayaka from the sea foam and prayed for better results. The milky white image became the tutelary deity of Indra.

During the penance at Swamimalai, Indra placed the image at this spot and subsequently found it hard to move it when a divine voice commanded him to construct a shrine for Vinayakar.

This shrine has the sacred idol of Vinayaka in the form of sea foam and in this aspect the deity is known as "Swetha Vinayaka" (White Vinayaka). It is believed that on the Vinayaka Chathurthi day in the month of September every year, Indra pays a visit to carry out his appointed Pooja. Thirugnanasambandar and Thirunavukkarasar have sung in praise of the presiding deity.

This temple is also notable for its architectural garndeur with marvellously wrought stone windows and sculptures of divine damsels.

# பொருள் அடக்கம்


| வரிசை எண் | பொருள். | பக்கம் |
|---|---|---|
| 1. | தலக் குறிப்பு. | 1 |
| 2. | கோயிலும் இடமும். | 3 |
| 3. | மூர்த்திகள் தீர்த்தங்கள் | 6 |
| 4. | தலப் பெருமைகள். | 7 |
| 5. | திருப்பணிகள். | 7 |
| 6 | சிற்பங்கள். | 8 |
| 7. | தினப்படி பூஜைகள் | 9 |
| 8. | புராண வரலாறு. | 9 |
| 9. | ஏரண்ட முனிவர் காவிரி வரலாறு. | 9 |
| 10 | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். | 10 |
| 11. | திருவலஞ்சுழி தேவாரங்களும், துதிப்பாடல்களும். | 10 |

திருவலஞ்சுழி ஸ்ரீ சுவேத விநாயகர் கோவில் ராஜகோபுரமும்
ஜடா தீர்த்த குளத்தின் தோற்றமும்



ஸ்ரீ சுவேத விநாயகர் சன்னதியும், உற்சவ மண்டபத் தோற்றமும்

உ

திருச்சிற்றம்பலம்.

## விநாயகர் துதி.

*பிடியதன் உருவுமை கொள மிகு கரியது*
*வடி கொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடி கணபதி வர அருளினன் மிகு கொடை*
*வடிவினர் பயில் வலி வலமுறை இறையே.*

## திருஞானசம்பந்தர் தேவாரம்.

*என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து*
*முன்னம் நீபுரி நல்வினைப்பயனிடை முழுமணித்தரளங்கள்*
*மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்*
*பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.*

## திருவலஞ்சுழி தலக்குறிப்பு.

| | |
|---|---|
| சுவாமி திருநாமம் : | கபர்த்தீசர், கற்பகநாதேஸ்வரர், வலஞ்சுழி நாதர். |
| அம்மன் திருநாமம்: | பெரியநாயகி. |
| தலவிநாயகர் : | சுவேதவிநாயகர், வெள்ளை வாரணம். தேவேந்திரனால் கடல் நுரையால் ஆக்கப் பட்டு பிரதிஷ்டிக்கப்பட்டது, எனபது வரலாறு. |
| தீர்த்தங்கள்: | (1) காவிரி.<br>(2) அரிசொல் நதி. (அரசலாறு)<br>(3) ஜடாதீர்த்தம் (கோபுரத்தை அடுத்து உளபுறம் உள்ள பழமையான குளம) |
| தலவிருக்ஷம்: | வில்வ மரம். (அம்மன் சன்னதியில் உள்ளது) |
| தலப்பெயர் : | காவிரி வலஞ்சுழித்து ஓடுவதாலும், வெள்ளை விநாயகர் வலம் சுழிதத மூர்த்தி யாக இருப்பதாலும் திருவலஞ்சுழி எனப் பெயர் வழங்கலாயிற்று. சகதிவனம், திருணவர்த்தம். தக்ஷிணவர்த்தம், எனவும் பெயாகளுண்டு. தீர்ததம், மூர்த்தி, தலம் என்ற மூன்று பெருமைகளையும் உடையது இத்தலம். |

## அருள்பெற்றவர்கள்.

(1) சோழ மன்னன் (2) ஏரண்ட முனிவர் (3) ஆதிசேஷன (4) பராசக்தி. (5) திருஞானசம்பநதர் (6) திருநாவுக்கரசர் (7) பிரமன் (8) இந்திரன் (9) ஓர் மலைப்பாம்பு.

## பக்கத்தில் உள்ள சிவஸ்தலங்கள்.

(1) திருச்சத்தி முற்றம் (2) பட்டீஸ்வரம் (3) திருநல்லூர் (4) திருப்பாலத்துறை (5) திருவேரகம் (6) கொட்டையூர் (7) கும்பகோணம் முதலியன.

## கோயிலின் நிலப்பரப்பு.

கோயிலின் சுற்றளவு கீழ்மேல் சுமார் 890 அடிகள், தென் வடல் சுமார் 353 அடிகள்.

## பிரகாரங்கள்,

ரதவீதியைச் சேர்த்து 4 (நான்கு)

## கோபுரம் மண்டபங்கள்.

5 மண்டபங்கள், 5 நிலை ராஜகோபுரம் உள்ளது.

## சிற்பம்

சிற்பத்தின் சிகரமாய் விளங்கும் இக்கோயிலில் பழங்காலக் கற் சிற்பங்கள் பலவற்றையும் காணலாம். சுவேதவிநாயகர் மண்டபச் சித்ரதூண்கள், முற்றிலும் கருங்கல்லால் ஆன பலகணி (சன்னல்) சக்கரத்துடன்கூடிய ரதம் போன்ற அமைப்பு, காண்போர் கண்ணையும் கருத்தையுங் கவரும் தன்மையன.

## பூஜா காலங்கள்.

1. காலசந்தி.
2. உச்சிக்காலம்.
3. சாயரக்ஷை.
4. அர்த்தசாமம்.

மாலையில் பூஜை நந்தியெம்பெருமான் பின் இருந்தே ஆராதனைகள் நடைபெறுகின்றன.

## கல்வெட்டுக்கள்.

இவ்வாலயத்தில் சுவாமி சுற்றுச்சுவர்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவைகள் அரசாங்கத்தாரால் நகல் எடுக்கப் பட்டு தென் இந்திய கல்வெட்டுத் தொகுதியில் 1903ம் ஆண்டில் 618 மு 634 எண்களாகவும் 1918ல் 192மு 213 எண்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## நிர்வாகம்.

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி தேவஸ்தானத்தில் உட் கோயிலாக இருக்கிறது. (குறிப்பு) சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா துணை ஆணையரிடம்மிருந்து வந்த ஓ. ஏ. நெ. 107/55,

30—11—55 தேதி கடிதப்படி (சப்டெம்பிர்) ஆக இக்கோயில் சேர்க்கப்பட்டுள்ளது.

சுவாமிமலை கோயில் அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரி இவர்களின் நேரடி நிர்வாகத்தில் திறம்பட நடைபெற்று வருகிறது.

## புராண வரலாறு

இக்கோவிலைப் பற்றிய பழைய புராணம் ஒன்று வடமொழியில் உள்ளதாகக் கூறப்படுகிறது. சேக்கிழார் பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் சரித்திரப் பகுதியில் இத் தலத்தைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன.

## கோயிலும் இருப்பிடமும்

யாவற்றையும் கடந்த பரம்பொருளே சகத்தில் உள்ள மக்கள் உய்வதற்கு அருவநிலையைத் தாமே களைந்து உருவநிலையெய்தியும், உருவாஉருவ நிலையெய்தியும் ஆங்காங்கு கோயில் கொண்டு தரிசனம் தந்து காத்தருளுகிறான். என்றும் இறைவன் தன்னுடைய அருள் சக்தி கொண்டு நீங்காது நிறைந்திருப்பானுயினும் அடியவர்கள் புறக்கண்ணுக்குப் புலப்பட்டு வழிபட நின்ற நிலையே உருவ வழிபாட்டுக்கு மூலாதார மாகும். கோயில்களில் லிங்க வடிவத்திலும் விக்கிரக வடிவத்திலும் நின்று அவன் அருள் பசுவின் மடியில் இருந்து பால் சுரப்பதுபோல் அடியார்களுக்கு எளிதில் அடைய அமுதமாகி இருக்கின்றான்.

*"இருஞ்சுரபிக்கு எங்கும் உருக்காண ஒண்ணுதபால்*
*விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருள்வன் அன்*
*[பர்க்கே"*

என சிவஞான சித்தியில் கூறப்பட்டுள்ளது.

*எங்கும் சிவனிருப்பன் ஆனுலும் ஏசற்ற*
*சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும் லிங்கத்தும்*
*ஆவின் உடம்பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்*
*பாவு முலைக்கண் மிகுதிப்பன்.*

என சிவஞானப்பிரகாச வெண்பாவிலும் கூறப்பட்டுள்ளது.

திருவருள் ததும்பியதும் அடியார்களாம் நாயன்மார்களின் பொன்னடி பெற்றுத் தெய்வத் தமிழ்ப்பால் பெருக்கெடுத்து ஓடுகிறதுமான இறைவன் கோயில் கொண்ட திருத்தலங்கள் பல உள்ளன. அவைகளில் சில புராணப் புகழ் பெற்றவை. சில தானே தோன்றியவை. சில முனிவர்கள் போற்றியவை. சில தேவாரப் பாடல் பெற்றவையாம். அறுபத்தி மூன்று நாயன்மார்களில் முதல் மூவர் என்று புகழ்ந்து போற்றப்படும் சம்பந்தர், அப்ர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்ற தேவாரத் தலங்கள்

தமிழ் நாட்டிலும் ஈழமும் உள்பட 274 என்பர். அவைகளுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், தேவாரப் பாடலும், அருணகிரிநாதர் திருப்புகழும். பாடிப் புகழ்ந்த பெரும் புண்ணியத் தலமே திருவலஞ்சுழியாகும். சோழநாடு சோறுடைத்து என்பது மன்றி செவிக்கு இன்பம் பயக்கும் தெய்வத் தென்றல் தமிழ் வீசும் பெருமை பெற்று விளங்குகிறது. இலக்கியம் நிறைந்தது, இருடிகள் புகழ்ந்தது, முக்கண்ணன் உகந்தது, மூவுலகும் வியந்தது இச்சோழ நாடாகும். இத்தகு சிறப்புடைய சோழ நாட்டின் கண்ணே தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் தாலுக்காவில் சுவாமிமலைக்கு தெற்கில் ¾ மைலில் தஞ்சை கும்பகோணம் பஸ் பாதையில் கும்பகோணத்திற்கு மேற்கே 4 மைலில் சுவாமிமலை புகைவண்டி நிலையத்திலிருந்து 1 பர்லாங் வடக்கில் அமைந்த புண்ணியத்தலமே திருவலஞ்சுழியாகும். திருஞானசம்பந்தர் இத்தலத்தில் தன் அடியவர் குழாங்களுடன் பலநாட் தங்கி அருகில் உள்ள பல தலங்கட்குச் சென்று பாடல் அருளி மீண்டும் இங்கு வந்து தங்கியிருந்த பெருமையை சேக்கிழார் பெரிய புராணத்தில் மிக அழகாய்ச் சொல்லியுள்ளார். திருநாவுக்கரசர் பல பதிகங்கள் பாடியும் சிறப்பித்தது. பெரியோர் கள் உகந்த தலம். சிற்பக்கலை கொலுவிருந்த தலம். சோலை சூழ்ந்த வளப்பம் மிகுந்த ஊருமாகும் இத்தலம். இத்தலத்திற்கு மிக அருகாமையில் அரிசொல் நதி என்ற அரசலாறும் அதனை அடுத்து வடக்கில் பொன் கொழிக்கும் காவிரி ஆறும் தாவி வருகின்றன. இங்கு நதியானது வலஞ்சுழித்து வருவதாலும் திருவலஞ்சுழி எனப்பெயர் ஏற்பட்டதென்பர்.

இத்தலத்திற்குச் சக்திவனம், தக்ஷிணாவர்த்தம், திரிணாவர்த் தம் என்ற மறுபெயர்களும் உண்டு. இந்த ஊர் ஞானசம்பந்தர் காலத்தில் பெரிய ஊராக இருந்திருக்க வேண்டும். தற்காலம் மிகச் சிறிய ஊராக இருக்கிறது. பக்கத்து ஊர் பட்டீஸ்வரம் செல்லும் வழியில் 1 மைலில் சோழன் மாளிகை என்றும் மாளிகை மேடும் என்றும் சோழன் அரண்மனை இருந்ததாக வரலாறுகளும் சான்றுகளும் உள்ளன. அரசன் அருகாமையிலிருந்ததனால் இக்கோயில் மிகப் பெரிய கோயிலாகவும் பெரிய திருப்பணி களுடையதாகவும் இருக்கிறது.

இங்கு ஓர் ஆரம்பப் பள்ளியும், தபால் நிலையமும் பிள்ளை ஒருவரால் நிறுவனம் செய்யப்பட்ட தர்மசத்திரம் ஒன்றும் உள்ளது. அதில் கல்லூரி மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறது. மக்கள் தொகை சுமார் 4200. இத்தலத்தில் பராசக்தி, ஆதிசேஷன், ஞானசம்பந்தர், அப்பர், சோழமன்னன் முதலியோர் இறைவன் திருவருள் பெற்றனர்.

ஏரண்ட முனிவர் முக்திபெற்ற தலமாகும். திருவிடைமருதூர் தலபுராணத்தில் தென்னாடு முழுவதும் சிவாலயமாகக் கூறு மிடத்து இத்தலத்தை விநாயகர் தலமாகக் கூறுகிறது. 'திணி புகழ் ஆலங்குடியிற் குருமூர்த்தியானைத் திருமுகத்தோன் வலஞ் சுழி ஏரகத்திற் செவ்வேள்' என்பதால் தெரிகிறது.

## கோயில் அமைப்பு

கோயில் சோலை நடுவில் பஸ் ஓடும் பாதைக்குச் சற்று அருகில் ஐந்து கண்கள் கொண்ட பெரிய ராஜ கோபுரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்குள் மூன்று பிரகாரங் களும் வெளியில் ஓர் வீதியும் உள்ளன. முன்கோபுரத்தை அடுத் தாற்போல் திருக்குளமும் மண்டபக் கோயிலும் உள்ளன. அடுத்த வாயிலுக்கு உள்ளே கொடி மரமும் நந்தி மண்டபமும் சுவேத விநாயகர் (வெள்ளைப் பிள்ளையார்) சந்நிதியும் உள்ளன. விநாயகர் மண்டபம் சிற்பச் சித்திர வேலைப்பாடு உள்ளது. கல்லால் அமைக்கப்பட்ட சித்ரத் தூண்களும், கல்குத்து விளக்குகளும் கல் பலகணிகளும் அமைக்கப் பெற்றவை. வடக்கில் அலங்கார மண்டபம் உள்ளது. இதை அடுத்து உள்ள சுற்றில் நிறைபணி மண்டபம் உள்ளது. தெற்கில் மடப்பள்ளியும் வடக்கில் உத்சவ மண்டபமும் உள்ளன. உள்சுற்றில் (உட்பிரகாரம்) தென்புறம் பல லிங்க மூர்த்திகளும், நவசக்தி மூர்த்தங்களும் மேற்கில் ஸ்தல விநாயகர் வலம்சுழி விநாயகரும் அடுத்து சோமாஸ்கந்தர், சண்முக சுப்பிரமணியர், இலக்குமி முதலிய மூர்த்திகளும் வட புறத்தில் பலரால் பூஜிக்கப்பட்ட லிங்க பாணங்களும், இருக் கின்றன. தென்புறம் கறுவரைச் சுவரில் தக்ஷிணாமூர்த்தி, நடராஜர், பிக்ஷாடனர், முதலிய சிலாவிக்கிரகங்களும் வடபுறம் சண்டேசர் தனியே சனிபகவான் மட்டும் (இங்கு நவக்கிரகம் இல்லை) இருக்கிறார். சுவாமி சன்னதியில் வடபுறம் உத்சவ மூர்த்திகளும் பிரதானமான ஸ்ரீ நடராஜமூர்த்தி பழைய பெரிய மூர்த்தியாய் இருக்கிறார். மகாமண்டபம் உள் வடபக்கம் ஏரண்ட மகரிஷியும் உள்ளார். மூன்றாவது வெளிப்பிரகாரம் தென்புறத்தில் அம்பிகை பெரிய நாயகியார் கிழக்கு நோக்கி சன்னதி இருக் கிறது. சுவாமிக்கு வலப்புறத்தில் அம்மன் சன்னதி இருப்பது சில கோயில்களில் மட்டுமே. பெரும்பகுதி ஆலயங்களில் சுவாமிக்கு இடதுபுறம் தெற்கு நோக்கிய சன்னதியாக இருக்கும் அம்மன் சன்னதி. அம்மன் கோயிலில் உள்ளில் தென்புறம் அஷ்டபுஜகாளி வீற்றிருக்கிறாள். இத்தலம் பைரவர் ஸ்தலமாக ஒரு காலத்தில் இருந்திருக்கிறது. ராஜகோபுரத்தை அடுத்து தென்புறமாய் பைரவர்க்கு என்றே தனிக்கோயில் சிதைந்த நிலையில் உள்ளது. அதில் இருக்கும் பைரவர் மிக வேலைப்

பாடுள்ளது, பின்னமாய் உள்ளது. ஒரு காலத்தில் மிக உக்ர மூர்த்தியாய் இருந்த பைரவரை உடைத்து வீணுக்கி இருக்கின்றனர். அதுபற்றி வழங்கும் ஒரு கதையும் கூறுகின்றனர். கோயில் குருக்கள் இரவு அர்த்தஜாம பூஜை பூராவும் முடித்துக் கொண்டு போகும்போது தன் குழந்தையை கோயிலில் விட்டுப் பூட்டிக்கொண்டு போய்விட்டார். வீடு சென்று திரும்ப, கோயில் வந்து கதவு திறக்க எத்தனித்தபோது பைரவர் அசரீரியாய் உனது குழந்தை பத்திரமாய் இருக்கிறது காலையில் பெற்றுக்கொள் என்று சொன்னதாகவும் அதை மீறித் திறக்கையில் பைரவர் கோபமடைந்து பிள்ளையை இரண்டாகக் கிழித்துத் தூக்கி எறிந்ததாகவும் அதன் பின்னரே அதன் உக்கிரகலையை ஒடுக்கி விட்டனர் என்றும் வழக்கு. இங்கு இந்தத் தலத்திலிருந்த பல விக்கிரகங்கள் தஞ்சை கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தக்கோயில் பல வரலாறுகளைக் கொண்டது என்பது புலப்படும்.

## மூர்த்திகள், தீர்த்தங்கள்.

இத்தலத்தில் சுவேத விநாயகர் கோயில் முன்னே பெரிய மண்டபத்தில் பிரதான கோயிலாக அமைந்துள்ளது. திருப்பாற் கடல் கடைந்தபோது தேவர்கள் விநாயகர் வழிபாடு செய்யாது பாற்கடல் கடைய ஆரம்பித்தார்கள். அதுபோது அமுதம் கிடைக்காது இருக்கவே இந்திரன் உடனே கடல் நுரையை எடுத்து விநாயகர் உருவம் செய்து பூஜித்து பாற்கடல் அமுதம் எடுத்தார்கள். இந்திரன் தான் இருப்பிடம் செல்லும் வழியில் இந்த நுரையால் ஆக்கப்பட்ட விநாயகரையும் எடுத்துவந்தான். இத்தலத்தில் வைத்து சிவபெருமானை வழிபட்டு விநாயகரை எடுக்க முயலுகையில் எடுக்க முடியவில்லை. அதனால் அவன் அங்கேயே பிரதிட்டை செய்து விநாயகருக்கு நிறைமணி உத்சவம் முதலான நடத்தி வழிபட்டு தேவலோகம் சென்றான். இந்திரன் பூஜை இன்னும் 9-ம் திருநாள் நடத்தப்படுகிறது. கடல் நுரை மூர்த்தியானதால் பச்சைக் கற்பூரம் தூவுவதைத்தவிர வேறு அபிஷேகங்கள் கிடையாது. வாணி கமலாம்பாள் சமேதராய் விநாயகர் ஆவணி சதுர்த்தியை 9 நாளாக வைத்து பிர்ம்மோத்சவம் விநாயகருக்கே நடைபெறுகிறது.

கற்ப இல்லில் உள்ள கபர்த்தீசர் சுயம்புமூர்த்தியாவர். ஞானசம்பந்தர் தேவாரத்தில் என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே என்று மிக அருமையாகத் துதிக்கிறார். சுவாமிக்கு கற்பகநாதர், வலஞ்சுழி நாதர் என்ற பெயர்களும் உண்டு.

பெரியநாயகி அம்மன் தனிக்கோட்டகம் (கோவிலாக) உள்ளது. சதுர் புஜங்களுடன் கம்பீரமாய் வீற்றிருக்கிறாள்.

அம்பிகை மாடமாளிகை கூடகோபுரம் என்றபடி கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

## தீர்த்தம்

காவிரி என்று புராணம் கூறுகிறது. காவிரியினின்று பிரிந்த அரசலாறே வலஞ்சுழித்து ஓடுகிறது. இது தவிர கோவிலில் உள் ஜடாதீர்த்தம் என்ற திருக்குளம் அமைந்திருக்கிறது.

## தலப்பெருமைகள்

ஒரு காலத்தில் பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் வெளிவந்த காரணத்தால் பெரும்பிலம் (அதாவது பாதாளமளவுள்ள பள்ளம்) ஏற்பட்டது. காவிரி பொதிய மலையிலிருந்து வந்தபோது அப்பிலத் துவாரத்தில் இறங்கிவிட்டது. அது கண்ட சோழ மன்னன் பெருங் கவலை கொண்டான். அது சமயம் ஒரு அசரீரி வாக்கு ஏற்பட்டது. பாதாளத்தில் ஒரு அரசனோ அல்லது ஒரு மகரிஷியோ இறங்கி பலியிட்டுக்கொண்டால் பிலம் மூடுபடும் என்றது. மன்னன் கலங்கினான். இங்கு தவம் செய்த ஏரண்ட முனிவர் மன்னனைத் தேற்றித்தானே இரங்கினார். பிலமும் மூடியது. காவிரியும் நேரே ஓடியது. ஏரண்ட மகரிஷியின் உருவமும் கோவிலில் உள்ளது.

ஆதிசேஷன் மகா சிவராத்திரி அன்று பாதாளமிருந்து வெளி வந்து நான்கு யாமத்துக்கும் நான்கு தலங்கள் சென்று வழி பட்டான். அவை திருவலஞ்சுழி, ஒன்று. மற்ற மூன்று தலங்கள். முறையே திருநாகேஸ்வரம், திருப்பாம்புரம் திருநாகைக்காரோணம் என்பன.

பராசக்தியும் ஒரு முனிவருக்குப் புதல்வியாக அவதரித்து இத்தலப் பெருமானை வழிபட்டுச் சிவபெருமானைத் திருமணம் செய்துகொண்டாள். அதனால் சக்தி வனம் என்ற பெயர் ஏற்பட்டது என்பதும் இத்தல வரலாறாகும்.

ஓர் பெரிய பாம்பும் இத்தலத்தில் பாபவிமோசனம் ஏற்பட்ட தாக ஒரு வரலாறு. பிரம்மன், திருமால், இந்திரன் முதலியவர்கள் வழிபட்ட தலம்.

## திருப்பணிகள்

இக்கோயில் திருப்பணிகள் பழங்காலத்தவை. இன்றும் பல திருப்பணிகள் செய்யவேண்டியுள்ளது. தேவஸ்தானத்தாரும் திருப்பணிகள் செய்யத் திட்டமிட்டுள்ளார்கள்.

## திருப்பணிப்பயன்

*புல்லினுல் வருடங்கோடி புது மண்ணுல் பத்துக்கோடி*
*செல்லுமா ஞாலந்தன்னில் செங்கலால் நூறுகோடி*
*அல்லியம் கோதை பாகன் ஆலயம் மடாலயங்கள்*
*கல்லினுல் இயற்றுவித்தோர் கயிலைவிட்டு அகலார்தாமே*

சிவபக்த அன்பர்கள் இம்மாபெருங்கோயில் திருப்பணியில் பங்கு கொண்டால் பெரும் புண்ணியம் உண்டாம்.

## சிற்பங்கள்

மிகப் பழமையான இக்கோயிலின் பல சிற்பங்கள் கல் வெட்டுக்கள் முதலியன சிறந்து காணப்படுகிறது. விநாயகர் கோயில் மண்டபங்கள் ஆவுடையார்கோயில் போன்று கொடுங் கைகள் முதலியன வேலைப்பாடு உள்ளது. கருங்கறபலகணி, சிற்ப சாஸ்திர சிறப்பை எடுத்துக்காட்டுகிறது பழங்காலச் சிற்பங் களின் வேலையின் சிறப்பையும எடுத்துக்காட்டுகின்றன. ஆறு கருங்கற் குத்துவிளக்கும் அம்மண்டபத்தில் நிற்கின்றன. இம் மாபெரும் மண்டபம் முதலியன இந்திரனுல் நிர்மாணிக்கப்பட்ட தாக வரலாறு. அக்காலத்தில் மாபெரும் ராஜதானிக் கோயிலாக இருந்திருக்கவேண்டும்.

## கல்வெட்டுச் சுருக்கம்

இக்கோயிலில் சுவாமிகோயில் உள்சுற்று சுவரில் காணப் படும் கல்வெட்டுச் சுருக்கம் பின்வருமாறு:

சோழ மன்னர்களான திரிபுவன சக்கரவர்த்தி, திருபுவன வீரதேவன், மதுரை, இலங்கை கருவூர்களைக் கைப்பற்றியதுடன் பாண்டியர் முடியுங்கொண்ட சோழன் ராஜாதிராஜதேவன், ராஜ கேசரிவர்மன், பரகேசரிவர்மன், ராஜராஜதேவன், விக்ரமசோழன உடையார், ராஜேந்திரதேவன், முதலிய சோழமன்னர்கள் ஆட்சிக் காலங்களில் கோயில் வழிபாட்டுக்கு நிலங்களும் நந்தாவிளக்கு களும் வழங்கப்பட்டுள்ளன. சிவபாத சேகரதேவன் என்னும் பட்டம் பெற்ற ராஜராஜதேவன் திருவல்லத்தில் தங்கி இருந்த பொழுது தனது பிறந்தநாள் நினைவிற்காக நிலங்களைத் தானம் செய்துள்ளான். திருநாவுக்கரசர், திருவாதவூரர், கண்ணப்பர் முதலிய மூர்த்திகளின் வழிபாட்டுககாகவும் நிலங்களையும் தந்துள்ளான். ராஜராஜ தேவனுடைய இராணியார் லோகமா தேவியார் புதல்விகள் குந்தவை, மாதேவடிகள், ஆகியோர்களால் க்ஷேத்திரபாலதேவர் கோயில்களுக்கு நகைகள் வழங்கப்பட் டுள்ளன. சுவேதவிநாயகருக்கும் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.



வேலைப்பாடுகள் உள்ள கருங்கல் பலகணி



ஸ்ரீ சுவேத விநாயகர் கோவில் வெளிப்புறத் தோற்றம்

## நித்தியப்படி பூஜைகள்

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. காலசந்தி, உச்சி காலம், சாயரக்ஷை, அர்த்தசாமம் என்பன இரவு பூஜைகள். வைத்திலிங்கம் பிள்ளை சத்திரத்திலிருந்து கட்டளைகளாக நடந்து வருகின்றன. மாலையில் பூஜை நந்திதேவர் பின் இருந்து நடக்கிறது. பிரதோஷத்தில் வளர்பிறை தேய்பிறை த்ரயோதசி திதியில் சூரியன் மறைவதற்கு முன்பு பின்வரும் மூன்றே முக்கால் நாழிகையாகும். சிறிய ரிஷபவாகனத்தில் சுவாமி புறப்பாடு கோவிலுக்குள் நடைபெறும்.

## திருஞானசம்பந்தர் பதிகம் பாடியது

திருஞானசம்பந்தர் பல தலங்கட்கும் சென்று வழிபட்டு சோழநாட்டில் உள்ள ஆவூர் பசுபதீச்சுரம், திருநல்லூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு பதிகம்பாடி வழிபட்டுக்கொண்டு திருவலஞ்சுழிக்கு வந்து சேர்ந்தார். பக்தியில் முதிர்ந்த அன்பர்கள் முத்தமிழ் விரகர் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைக்கக் கூட்டமாக, திருவலஞ்சுழிக்கோயில் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றனர். ஞானபோனகர் வலம்சுழிப் பெருமானைப் பெருங் காதலுடன் வழிபட்டு இன்னிசையுடன் பதிகம்பாடி போற்றினர். பிறகு ஞானசம்பந்தர் இத்தலத்திலேயே சிலநாள் தங்கி இருந்து நாள்தோறும் தொண்டர்களுடன் சென்று வலஞ்சுழிப் பெருமானை வழிபட்டு வந்தார். இவ்வரலாறுகளைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

## சேக்கிழார் புராணம்

1. *மறைவிளங்கும்அப் பதியினில் மணிகண்டர் பொற்றாள்*
*நிறையும் அன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்*
*பிறைஅணிந்தவர் அருள்பெறப் பிரசமென் மலர்வண்*
*டறைநறும்பொழில் திருவலஞ்சுழியில்வந் தணைந்தார்.*

2. *மதிபுனைந்தவர் வலஞ்சுழி மருவு மாதவத்து*
*முதிரும் அன்பர்கள் முத்தமிழ்விரகர் தம்முன்வந்து*
*எதிர்கொள்போழ்தினில் இழிந்தவர் எதிர்செல மதியைக்*
*கதிர்செய்வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்ததெனக் கலந்தார்*

3. *கலந்த அன்பர்கள் தொழுதெழக் கவுணியர் தலைவர்*
*அலர்ந்த செங்கமலக்கரங் குவித்துடன் அணைவார்*
*வலஞ்சுழிப் பெருமான் மகிழ்கோயில் வந்தெய்திப்*
*பொலங்கொள் நீள்சுடர்க் கோபுரம் இறைஞ்சிஉட் புகுந்தார்*

4. *மருவலார்புரம் முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்டு*
*உருகும் அன்புடன் உச்சிமேல் அஞ்சலி யினராய்த்*
*திருவலஞ்சுழி உடையவர் சேவடித் தலத்தில்*
*பெருகுமா தரவுடன் பணிந்தெழுந் தனர் பெரியோர்*

5. *ஞானபோனகர் நம்பர்முன் தொழுதெழு விருப்பால்*
*ஆனகாதலில் அங்கண ரவர்தமை வினவும்*

*ஊனமில் இசையுடன் விளங்கிய திருப்பதிகம்*
*பான லார்மணி கண்டரைப் பாடினர் பரவி.*

6. *புலன்கொள் இன்தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே*
*இலங்கு நீர்பொன்னி சூழ்திருப் பதியினில் இருந்து*
*நலங்கொள் காதலினல் நாதர்தாள் நாள்தொறும் பரவி*
*வலஞ்சுழிப் பெருமான் தொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்.*

## திருநாவுக்கரசர் வழிபட்டது

திருநாவுக்கரசர் சோழநாட்டில் உள்ள பல தலங்களைத் தரிசித்துப் பிறகு நல்லூர், பழையாறை முதலிய தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டார். பிறகு திருவலஞ்சுழிக்கு வந்து வலஞ்சுழிப் பெருமானைத் தரிசித்து பல பதிகங்களைப் பாடி வழிபட்டார், இவைகளைக் குறித்துப் பெரிய புராணத்தில் பின் வரும் செய்யுளில் சேக்கிழார் பாடுகிறுர்.

*நல்லூரில் நம்பர் அருள்பெற்றுப் போய்ப் பழையாறை*
*பல்லூர் வெண்தலைக் கரத்தார் பயிலும் இடம்பல பணிந்து*
*சொல்லூர் வண் தமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி*
*அல்லூர் வெண்பிறை அணிந்தார் திருக்குட மூக்கணைந்*
*[திறைஞ்சி,*

## முடிவுரை

முழுமுதற் கடவுளான சிவபெருமான் எல்லையில்லாத் தனிப் பெருமையுடையவன். அவருடைய திருக்குமாரனும் ஸ்ரீசுவாமி நாதன் பெருமையும் அத்தகைத்தே. தமிழ் நாகரிகம், தமிழன் பெருமை பரவிய இடமெல்லாம் முருகன் பெருமையே ஆகும். அத்தகைய முருகனும் சுவாமிநாதன் பெருமையை முக்காலமறிந்த முனிவர்களும் எடுத்து எழுத இயலாததாம். அவ்வாறிருக்க இச்சிறியோம் அவன் பெருமையை அளவிடுவதுபோல எழுவதும் அவன் எழுந்தருளிய திருவேரகத்தின் மாண்பினைப் புகழ்வதும் முடியாத செயலே.

இருப்பினும் கருத்துக்குத்தேனுய், கண்களுக்குகவியாய், சொல்லுக்குக் கரும்பாய் எழுந்தருளி அடியாாகளின் கண்கண்ட தெய்வமாய்க் கருணை வடிவுகொண்ட அம்முதல்வன் ஏரகத்துச் சுவாமி நாதன் அருந்துணை கொண்டு ஒருவாறு இத்தலப் பெருமை எழுதப்பட்டது. கிடைத்த சில தலநூல்களையும் வழிவந்த முதியோாகளின் கறுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஏதோ ஒருவாறு எழுதப்பட்டது. இன்னும் பல வெளிவராத நூல்கள் இருக்கலாம். அரிய உண்மைக கருத்துக்களும் இருக்கலாம். அன்பர்கள் அவன் அருளால் கிடைக்கப் பெற்றுல் அடுத்த பதிப்பில் சேர்க்கலாம். இந்நூலில் பல சொல்குற்றம் கருத்துப் பிழைகள் இருக்கலாம். படிக்கும் அன்பர்களும் பெரியோர்களும் அவைகளை மன்னித்து குருநாதன் திருவடிப்பேற்றை யடையுமாறு வேண்டுகிறோம்.

சுபம்.

திருச்சிற்றம்பலம்

# துதிப்பாடல்கள்

## திருவலஞ்சுழித் தேவாரம், திருஞானசம்பந்தர் பாடியது

பண் ---------- நட்டராகம்

1. என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

2. மாதோர்கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித் திசை கற்றுவல் லார்சொலக் கேட்டு கந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே.

## திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகை.

3. ஓதமார் கடலின் விட முண்டவன்
பூதநாயகன் பொற் கயிலைக் கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும் நம் பாவமே.

4. இளைய காலம் எம்மானை அடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்காள் நும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைகணாகக் கருதிநீர் உய்ம்மினே

5. இலங்கை வேந்தன் இருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிரல் ஊன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி என்தலை மேலவே.

## திருத்தாண்டகம்

6. அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருள்நாட்ட மாடி வேடம்
தொலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவி விடை மேல்கொண்டு
இலையார் படைகையி லேந்தி யெங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவினாரே.

## திருவலஞ்சுழியும் — திருக்கொட்டையூரும்

7. கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீழ் இருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணி நீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணி போல் அழகமருங் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே.

8. விண்டார் புரமூன்று எரித்தான் கண்டாய்
விலங்கலில் வல்லரக்க னுடல் அடர்த்தான் கண்டாய்
தண்தா மரையானும் மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்டகழ லான் கண்டாய்
வண்டார் பூஞ்சோலை வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கங்
கொண்டாடு வேதியர் வாழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே.

## சிவநாமப்பஃறொடை வெண்பா.

9. மன்று வலஞ்சுழியின் வாழ்பெரிய நாயகியாட்கு
இன்னமுத மான கபர்த்தீசுரா———

## திருவலஞ்சுழி மும்மணிக்கோவை.

10. வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவா பொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணக்கடல்
மருங்குங் காவிரி மடந்தை வார் புனல்
உடுத்த மணி நீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அல்லது அடியே

11. பொருட்டக்கீர் இல்பலிக் கென்றில் புகுந்தீரேனும்
அருட்டக்கீர் யாது மூரென்றேங் — மருட்டக்க
மாமறைய மென்றூர் வலஞ்சுழி நம்வாழ்வென்றூர்
தாம் மறைந்தார் காணேன் கைச்சங்கு ———— நக்கீரதேவர்.

## க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்

12. மந்தா மெனுங்கிரியை மத்தாக நிறுவியே
வாசுகியை நாணதாக்கி
மாலயனொடு இந்திராதிய மற்றெல்லாம் கூடி
வளர்பயோ ததி கடையும் நாள்

எந்தைஐங் கரனைமுன் வணங்காமலதுசெய
வியம்புமலை கீழிழுப்ப
இந்திராதி யோரறிந் தைங்கர விநாயகன்
இணையடிகள் பூசைசெய்ய
வந்தமந் தாகிரி சுழன்றமுத முதவவே
அன்புடன் பின்பவ ரெல்லாம்
அமுத மபிடேகிக்க அமுதநிற மாதலால்
அருள் வெள்ளை வாரண மெனும்
தந்திமுகவற் கிளவல் திருவலஞ்சுழி முருக
சப்பாணி கொட்டியருளே
சந்திரசே கரனை அந்தி வண்ணன் மதலை
சப்பாணி கொட்டியருளே

## விநாயகர் காப்பு

வெள்ளை வாரணப்
பிள்ளையார் பதம்
உள்ள ஞானமே
கொள்ள லாகுமே

## கபிலர் பாடிய இரட்டைமணிமாலை

வந்தா றலைக்கும் வலஞ்சுழிவானவ வானவர்தம்
அந்தார் மகுடத் தடுத்தபைம் போதிலந் தேனுழக்கிச்
செந்தா மரைச்செவ்வி காட்டுந் திருவடிக்குஞ் செல்லுமே
எந்தா யடித் தொண்ட ரோடிப் பிடித்திட்ட இன்மலரே

## பரணர் பாடிய அந்தாதி

பார்மேவு கின்ற பலருருவர் பண்டரங்கர்
பார்மேவு கின்ற படுதலையர் — பார்மேல்
வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வர்
வலஞ்சுழியைச் சேர்வா குவார்

## காளமேகம் பாடிய தனிப்பாடல்கள்

பரவாத தும்பி கருகாத வெங்கரி பண்பு ரண்டே
இருகாத சந்தி யுருகாத மாதங்கம் இந்து நுதல்
திரவாத சிந்தூரம் பூசாக் களபம் நெடுஞ்சுனையிற்
பிரவாத ஆம்பல் வலஞ்சுழிக்கோ வரப் பெற்றனளே

## அம்மானை

*செல்லார் வலஞ்சுழியிற் செங்கழுநீர்ப் பிள்ளையார்*
*எல்லார்க்கு நல்லவரா மீவர்கா ணம்மானை*
*எல்லார்க்கு நல்லவரா மீவாரோ யாமாயின்*
*தொல்லுலகில் உள்ளோர் துதியாரோ அம்மானை*
*துதிக்கையவர் தமக்கு சொந்தமன்றோ அம்மானை*

## அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்

*மகர குண்டல மீதே மோதுவ*
*வருணபங்கய மோபூ வோடையில்*
*மருவு செங்கழு நீரோ நீவிடு* — *வடிவேலா*

*மதன்விடுங் கணையோ வாளோ சில*
*கயல்கள் கெண்டைகளோ சேலோகொலை*
*மறலி யென்பவனோ மானோமது* — *நுகர் கீதே*

*முகர வண்டின மோவான் மேலெழு*
*நிலவருந்து புளோமா தேவருண்*
*முதிய வெங்கடுவோதே மாவடு* — *வகிரோமார்*

*முடிவெனுங் கடலோயா தோவென*
*உலவு கண்கொடு நேரே சூறைகொள்*
*முறையறிந்தப சாசே போல்பவர்* — *உறவோமா*

*நிகரில் வஞ்சக மாரீசாதிகள்*
*தசமுகன் படை கோடா கோடிய*
*நிருதரும் பட வோரே வேவிய* — *அடுபோர் செய்*

*நெடியனங்கனு மானோ டேயெழு*
*பதுவௌங்கவி சேனசேவித*
*நிருபனம் பார் கோமான் ராகவன்* — *மருகோனே*

*சிகர உம்பர்கள் பாகீ ராதிகள்*
*பிரபை யொன்று பிராசா தாதிகள்*
*சிவசடங் காமொடீசானதிகள்* — *சிவமோனர்*

*தெளிய மந்த்ரக லாபாயோகிகள்*
*அயல் விளங்கு சுவாமி காமரு*
*திருவலஞ்சுழி வாழ்வே தேவர்கள்* — *பெருமானே*

# பொதுப்பாடல்

## விநாயகர்

1. விநாயகனே வெவ்வினையே வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. — இரட்டை மணிமாலை

## முருகப்பெருமான்.

2. மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்கநின்ற ஈராறு தோள்போற்றி
—காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி
அன்னான்
சேவலும்மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி
— கந்தபுராணம்

## நடராஜர் (ஆடவல்லார்)

3. குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே
— திருநாவுக்கரசர்

## சிவபெருமான்

4. ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி அம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி.

## தேவியார்

5. மூவற்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரொளியாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்
— பதிபசு பாசவிளக்கம்

## தக்ஷிணாமூர்த்தி (தென்முகக் கடவுள்)

6. மும்மலம் பேறுபட்டொழிய மெய்த்துயிர்
அம்மலர்த்தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைம் மலர் காசியின் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சித்தி யாதரோ

— திருவானைக்கா புராணம்

## நால்வர்

7. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி

## சண்டேசுரர்

8. மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்

— சுந்தரர்

## கோளறுபதிகம் (நவக்கிரகங்கள்)

9. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## வாழ்த்து.

10. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்.

Printed at
Sri Janardhana Printing Works Ltd.,
Kumbakonam